மாலை முரசு

பக்கங்கள் 24+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை06 சனிக்கிழமை 22.11.2025 | அதிர்வு 115

## தமிழ், முஸ்லிம் எம்.பிக்களுடன் அநுர சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பி 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மாவீரர்களின் மடிவுக்குப் பலனாக இனத்துக்கு விடிவு கிட்ட வேண்டும்

## மாவீரர் பெற்றோர் மதிப்பளித்தல் நிகழ்வில் சுமந்திரன் பிரதிக்ஞை

(ந.லோகதயாளன்)

இந்த நாட்டில் அனைவரும் சமன் என ஜனாதிபதி சொல்வது உண்மையாக இருக்குமாக இருந்தால் உங்கள் சகாக்களை வணங்குவது போல் எமது மாவீரர்களது கனவையும் நனவாக்குகின்ற வகையில் அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளித்தல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட 03▶

# கண்டியில் மண்சரிவு துயரம்

- ஒருவர் உயிரிழப்பு
- நால்வர் காயங்களுடன் மீட்பு
- மேலும் சிலர் புதையுண்டிருக்கலாம் என அச்சம்
- மீட்புப் பணி தொடர்கின்றது



கண்டி, பஹல கடுகண்ணாவ பகுதியில் பிரதான வீதிக்கு அருகில் உள்ள வியாபார நிலையமொன்று மீது பாரிய கற்பாறையுடன் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் பலியாகியுள்ளார். நால்வர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

காயங்களுடன் மீட்கப் பட்ட நால்வரும் மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் மாவனெல்ல, கல்அனுமா பகுதி யைச் சேர்ந்த 03▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# யாழ்ப்பாணத்தில் கடலட்டைப் பண்ணைக்கு காவலுக்குச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் கடலட்டைப் பண்ணைக்குக் காவலுக்குச் சென்ற சிறுவன் ஒருவர் இன்று காலை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குருநகரைச் சேர்ந்த ஜோர்ஜ் ஸ்ரிபன் மதிவாணன் (வயது 17) என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குருநகர் பகுதியில் கடலட்டைப் பண்ணைக் காவல் பணிக்காக நேற்று வெள்ளிக்கிழமை இரவு சென்ற சிறுவன் காலையில் கரை திரும்பாத நிலையில் காணாமல்போயிருந்தார்.

சிறுவனைத் தேடி அந்தப் பகுதி மக்கள் தேடுதலை மேற்கொண்டனர். இதன்போது சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், யாழ். பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.







## மாவீரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நவம்பர் மாதம் என்பது உலகலாவிய ரீதியில் தங்கள் தேசங்களுக்காகப் போரிட்டு மடிந்தவர்களை நினைவு கூருகின்ற மாதம். அதனால்தான் உலகெங்கும் இராணுவத்தினராக இருக்கலாம், போராடியவர்களாக இருக்கலாம் அவர்களைப் பொப்பி மலரால் நினைவு கூருவார்கள். இது உலகம் எங்கும் நடைபெறும் ஒரு நிகழ்வு.

இப்படியான கார்த்திகை மாதத்திலேதான் நாங்களும் தங்களுக்காக அன்றி எங்களுக்காகப் போராடி மடிந்தவர்களை நினைவு கூருகின்ற ஒரு வாரத்தை அனுஷ்டிக்கின்றோம்.

சில நாட்களுக்கு முன்னர் நவம்பர் 13 ஆம் திகதி நாட்டின் தற்போதைய ஜனாதிபதியும் விகாரமாதேவி பூங்காவிலே தன்னோடு தோள் நின்று ஆயுதம் ஏந்தி மடிந்தவர்களை நினைவு கூருகின்ற படங்களை நாங்கள் பார்த்தோம். தங்களின் அன்றைய தலைவரின் சீருடையோடு அவர் இருக்கின்ற படம் அதன் பின்னணியில் இருக்கின்றது, ஜனாதிபதி அந்த மேடையில் பேசுகின்றார். அன்றும் அதற்குப் பின்பும் அவரின் தோளோடு தோள் நின்றவர்கள் இப்படியாக மலர் அஞ்சலி செலுத்தி அவர்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தமையை நாங்கள் பார்த்தோம்.

அதேபோன்று ஓர் இனத்தின் விடிவுகாகப் போராடியவர்கள் என்றும் எங்களின் மனங்களிலே நீங்கா இடம் பெற்றவர்கள். ஏனென்றால் எங்களுக்காகத் தங்கள் உயிர்களை அவர்கள் கொடுத்தவர்கள். இது நான் எப்போதுமே சொல்லுகின்ற விடயம். அவர்களுடைய அந்த அர்ப்பணிப்புக்கு ஈடாக நாம் எதையும் சொல்ல முடியாது.

ஏனென்றால் தங்களிடத்தில் இருக்கும் அனைத்தையும் அதாவது தமது உயிரையே எமக்காக அவர்கள் கொடுத்தவர்கள். இந்த அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்விலே பெற்றோர் வருகின்றபோது விசேடமாக தாய்மார், சகோதரிகள் வருகின்றபோது இன்னமும் அவ்கள் அழுது புலம்புவதைக் கண்டோம். இங்கே இன்னமும் என நான் கூறுவது இத்தனை வருடங்களாகியும் அவர்கள் அழுகின்றனர் என்றால் அதற்கு ஒரு காரணம் உண்டு. அந்தக் காரணம் இவர்கள் எம்மை விட்டுப் போய்விட்டனர் என்ற வருத்தம் மட்டும் அல்ல அதாவது நான் பெற்றவள் இருக்கப் பிள்ளை மடிந்து விட்டானே என்ற அங்கலாய்ப்பு மட்டுமல்ல அவர்களின் தியாகத்தினாலே இன்னமும் எமது இனம் ஒரு விடிவைக் காணவில்லையே, அது வீணாகப் போய் விடுமோ என்ற அங்கலாய்ப்பு அங்கே தென்படுகின்றது.

அவர்கள் மடிந்ததாலே இந்த இனம் விடிந்தது என்று தெரிந்தால் ஒரு பூரிப்பும் அதிலே கலந்து வரும். ஆனால் அப்படி இல்லாமல் போய்விடுமோ என்ற அங்கலாய்ப்போடு எங்களது இனம் காத்திருக்கின்றது.

தனியான ஓர் இறைமை மிக்க நாடுகாக அவர்கள் போராடினார்கள். ஆனால் சுயமாக ஆட்சி செய்கின்ற முறையிலாவது நாங்கள் எங்களை ஆளுகின்ற ஒரு முறைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் விளைகின்றோம். அவர்களுடைய அர்ப்பணிப்பும், தியாகமும் வீணாகப் போய்விடக் கூடாது. அவர்கள் பெற்றோர் இருக்கின்ற காலத்திலேயே ஒரு விடிவு ஏற்பட வேண்டும். சுயாட்சி முறையாவது எங்கள் கைகளில் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் பயணிக்கின்றோம்.

சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியை எங்கள் கட்சி சந்தித்துப் பேசிய போதும் இந்த விடயம் குறித்துப் பேசினோம். அதில் ஒரு மணித்தியாலம் அரசியல் தீர்வு குறித்து பேசினோம். 70 வருடங்களாக வெவ்வேறு வடிவத்திலான போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

உலகத்திலே எந்தச் சமூகமும், எந்த மக்களும் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ மாட்டார்கள். அதனை ஏற்கவும் மாட்டார்கள். அப்படியிருக்க ஒரு ஜனநாயகக் கட்டமைப்பிலே ஒரு மக்கள் எண்ணிக்கையில் 3 மடங்காக இருக்கின்ற போது எண்ணிக்கையில் குறைந்ததாகக் காணப்படும் சமூகம் எப்படி சம அந்தஸ்து உடையவர்களாக வாழ முடியும்? ஏனெனில் வாக்கெடுப்பு நடத்தினால் அது ஒரு பக்கமாக சாய்ந்துதான் நிற்கும். ஆனபடியால்தான் அதிகாரப் பகிர்வைக் கோருகின்றோம். நாட்டிலே நாங்கள் பெரும்பான்மையாக வாழாவிட்டாலும் நாம் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களிலே எங்களுக்கான அரச அங்கீகாரங்களைப் பகிர்ந்து கொடுங்கள் எனக் கேட்பதன் தாற்பரியம், நியாயப்பாடு அதுதான். இது செய்யப்பட வேண்டும். எவர் நிமித்தம் செய்யப்படாது விட்டாலும் மடிந்துபோன எங்களுடைய மாவீரர்களது தியாகத்தின் நிமித்தமாக அது செய்யப்பட வேண்டும்.

மாவீரர்களது உறவுகள் விசேடமாக அவர்களது பெற்றார்கள் அதனைக் காண வேண்டும். என்னுடைய மகன், என்னுடைய மகள் இதற்காகத்தான் தன்னுடைய வாழ்வைக் கொடுத்தார், அதன் பெறுபேற்றை நானாவது காண்கின்றேன் என்று சொல்லக்கூடியதாக இருக்க வேண்டும்.

தனி நாடு என்ற இலக்கை விட்டு விலகி விட்டோம் எனத் துரோகிப் பட்டம் சூட்டுகின்றவர்கள் இன்றைக்கும் எவராவது தனிநாட்டைக் கோருகின்றார்களா எனக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

தங்களோடு கூடக் களமாடு மடிந்தவர்களுக்கு என்று அந்தக் காலங்களில் நாட்டின் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு வீதி வீதியாக ரயர்கள் போட்டு எரிக்கப்பட்ட தங்களுடைய சகாக்களுக்காக நினைவு கூருகின்றபோது ஜனாதிபதியிடம் கேட்கின்றோம், அந்த நேரத்தில் அடக்குமுறையை மேற்கொண்டவர்களிடம் கேட்கவில்லை, அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் நாம் கேட்கின்றோம், எங்கள் மக்களிடமிருந்து எங்கள் பிள்ளைகள் மடிந்திருக்கின்றார்கள், ஒரு நியாயத்துக்காகப் போரிட்டு மடிந்திருக்கின்றார்கள், நீங்கள் உங்கள் சகாக்களை நினைவு கூருகின்றீர்கள், அதைப் போற்றுகின்றீர்கள். இந்த நாட்டில் அனைவரும் சமன் என நீங்கள் சொல்கின்றமை உண்மையாக இருக்குமாக இருந்தால் உங்கள் சகாக்களை வணங்குவதுபோல் இதோ இந்த மாவீரர்களது கனவையும் நனவாக்குகின்ற வகையில் அரசியல் தீர்வை ஜனாதிபதி கொடுக்க வேண்டும்." - என்றார்.

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

31வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள வியாபார நிலையம் உணவகமொன்று எனத் தெரியவருகின்றது. வீடொன்றுடனேயே இந்த உணவகம் அமைந்திருந்துள்ளது.

கடும் மழை பெய்து வந்த நிலையிலேயே இன்று காலை 8.45 மணியளவில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. சம்பவத்தின் போது உணவகத்துக்குள் 9 பேர் வரை இருந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

30 பேரடங்கிய இராணுவக் குழுவொன்று மீட்புப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. குறித்த வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மண்சரிவு இடம்பெற்ற பகுதி மண்சரிவு அபாய வலயம் என்று ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்களுடன் இன்று சந்திப்பு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தனது முகநூலில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

"இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பித்து, ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இனவாதத்தை ஒழிக்க, "இலங்கையர் தினத்தை" நடத்த, ஜனாதிபதி அநுர, எம்மை அழைத்து, எமது ஒத்துழைப்புக்களைக் கோரினார்.

எனது பதில் உரையில் நான் கூறியதாவது:-

"இனவாதத்தை ஒழிக்க, நீங்கள் கோரும் ஒத்தாசைகளை முழுமையாக வழங்குவோம்."

"நாட்டின் அனைத்து இன, மத, மொழி, தனித்துவங்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குச் சமாந்திரமாக, 'இலங்கையர் அடையாளம்' பேணி வளர்க்க பட வேண்டும்."

"இலங்கையில், அனைத்து பிரிவினருக்கும் இடையில், 'உரிமைகளின் சமத்துவம்' இருக்க வேண்டும்."

"இலங்கையர் தினக் கொண்டாட்டங்களின் போது, இலங்கையின் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக கலாசார ஊர்வலம் நடத்துங்கள். இலங்கையின் பன்மைத்துவம் பற்றி முதலில் இலங்கையர் அறிந்துகொள்ள வழி செய்யுங்கள்."

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் என்னுடன் பழனி திகாம்பரம் எம்.பியும் மற்றும் பல்வேறு கட்சிகளின் தமிழ், முஸ்லிம் எம்.பிக்களும் கலந்துகொண்டனர்." - என்றுள்ளது.

# சஜித் பலத்தைக் காட்டும் வரை நாமலே எதிர்க்கட்சித் தலைவர்

## நுகேகொடை பேரணி குறித்து மனோ கருத்து

“எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, இப்படி ஒரு கூட்டத்தை, வெளியே கூட்டிக் காட்டும் வரை, நாட்டிலே நாமல் ராஜபக்ஷதான் எதிர்க்கட்சித் தலைவர்.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

அநுர அரசுக்கு எதிராக நுகேகொடையில் நேற்று நடைபெற்ற பேரணி தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. தனது முகநூல் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். அதிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மனோவின் முகநூல் பதிவு வருமாறு:-

“நிகழ்வு ஆரம்பிக்க, முன் – பிடித்த, பின் – பிடித்த, படங்களைப் போட்டு, ஊடகற் நிறுவனங்களின் விருப்பப்படி, கூட்டம் பற்றி, செய்திகள் போடலாம்.

அவரவர் விருப்பம் வேறு. உண்மை வேறு. இதை நாம் பகுத்து அறியனும்.

சில மாதங்களுக்கு முன் சொந்த ஊரிலேயே, 50 பேரைக் கூட, திரட்ட முடியா நிலையில், இருந்த நாமலின்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, இன்று ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து, தம் பலத்தைக் காட்டியுள்ளது.

என் வீட்டில் இருந்து நடை தூரம், நுகேகொடை சந்தி. நடக்காமல், நேரடி தகவல். கூட்ட ஏற்பாட்டாளர் பலமுறை நமது கட்சிக்கு அழைப்பு விடுத்தார்கள். நமக்கு “சரி வராது சகோதரர்” என மறுத்து விட்டோம்!

இந்தக் கூட்டத்தை வைச்சு, அங்க யாரும், அரசை உடனடியாகக் கவிழ்க்க ஏலாது. அது கலர் கனவு!

மேடையிலும், அப்படி சொல்லப்படவில்லை. ஆனால், தான் கப்பல் கட்டுவது “ஹார்பரில்” தரித்து நிற்க அல்ல, ஆழ்கடலில் ஓடத்தான் என நாமல் சொன்னார்.

இது, அரசுக்குச் சவால் விடும் கூட்டம் என்பதை விட, தேசத்தின் பிரதான எதிர்க்கட்சி யார் என நிலை நாட்டுவதே அங்கே முதல் கனவு!

இதன் மூலம் இங்கே கூடிய சிங்கள (பௌத்த) மகாஜனம், சில செய்திகளைத் தந்தது.

(1) 2019 இல் கோட்டாவுக்கும், பின் 2024 இல் அநுரவுக்கும் வாக்களித்த, அதே 69 இலட்சம் மக்கள், விரும்புனா, தாய் வீடு திரும்பலாம். எந்நேரமும் மாறலாம். மாறாமலும் விடலாம். எப்படியும், இங்கே நாம் தான் எஜமானர்.

எங்கள் “தேசாபிமானம்” தான் இங்கே “பிரைம் சப்ஜெக்ட்”!

(2) சிறுபான்மை சில்லறைகள் மூடிக்கொண்டு வேடிக்கை பார்க்கனும்! அல்லது ஓரமா போய் விளையாடனும்!

(3) நாடாளுமன்ற, எதிர்க்கட்சித் தலைவரான சஜித், இப்படி ஒரு கூட்டத்தை வெளியே கூட்டிக் காட்டும் வரை, நாட்டிலே நாமல்தான் “ஒபொசிசன் லீடர்!” – என்றுள்ளது.





# மதுரை மீனாட்சி அம்மனைத் தரிசித்த ரணில் தம்பதி

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது மனைவி ஆகியோர் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு இன்று சென்று வழிபட்டனர்.

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்ட ரணில் தம்பதியினருக்குக் கோயில் நிர்வாகம் சார்பாக மரியாதை செலுத்தப் பட்டது.

அவர்கள் இருவரும் அம்மன் சன்னதியில் சாமி தரிசனம் மேற்கொண்டதைத் தொடர்ந்து சுந்தரேஸ்வரர் சன்னதியில் சாமி தரிசனம் மேற்கொண்டனர்.



ரணிலிடம் இந்திய ஊடகங்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பிய போதிலும் ஊடகங்களுக்கு அவர் எவ்வித பதிலும் கூறாது அவ்விடத்தில் இருந்து சென்றார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதிரணித் தலைவர் யார்?

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்பது நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகளின் பக்கத்தில் தலைமை வகிப்பவரைத்தான் குறிக்கும். ஆனால் முழு நாட்டையும் பொறுத்தவரை எதிர்க்கட்சிகளின் தலைமை நிலையில் இருப்பவர்தான் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பாரா என்று கேட்டால் அது பல சமயங்களில் சந்தேகத்துக்குரியதாகவே இருந்திருக்கின்றது.

தமிழர்தரப்பின் தலைவர்களான அமிர்தலிங்கமும் சம்பந்தனும் எதிரணியின் எம்.பிக்களின் எண்ணிக்கை அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அலங்கரித்த போதிலும், முழு நாட்டிலும் எதிர்க்கட்சிகளினது தலைவர்களாக அச்சமயங்களில் அவர்கள் விளங்கவில்லை. அதிலும் குறிப்பாக, நல்லாட்சிக் காலத்தில் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, அவ்வேளையில் ஆளும் தரப்புடன் சேர்ந்து தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கமான சுமுகத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தமையால், அவர் எதிர்க்கட்சிகளின் தலைவராக இல்லாமல் ஆளும்தரப்பினரின் 'கைப்பொம்மை' எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டார் என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

இப்போதும் கூட நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸா இருந்தாலும் ஒட்டுமொத்த நாட்டினதும் எதிர்க்கட்சிகளின் தலைவராக அவர் விளங்குகின்றாரா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

நேற்றைய தினம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரமுகர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகளால் நுகேகோடையில் பொதுப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்துக்கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தை வைத்து யாரும் அரசாங்கத்தை உடனடியாக கவிழ்த்து விட முடியாது. அது கனவு. அந்தக் கூட்ட மேடையிலும் அப்படிச் சொல்லப்படவில்லை. ஆனால், இது அரசாங்கத்துக்கு சவால் விடும் கூட்டம் என்பதை விட, தேசத்தின் பிரதான எதிர்க்கட்சி யார் என நிலைநாட்டும் ஒரு முயற்சி எனத் தமிழ் முற்போக்கு அணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார். அது ஓரளவு உண்மைதான்.

அவர் சுட்டுவது போல சில மாதங்களுக்கு முன் சொந்த ஊரிலேயே ஐம்பது பேரைக் கூடத் திரட்ட முடியாத நிலையில் இருந்த நாமலின் மொட்டுக் கட்சி இப்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட சில எதிரணி கட்சிகளுடன் சேர்த்து தமது பலத்தைக் காட்டியுள்ளது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இது அரசாங்கத்துக்கு சவால் விடும் கூட்டம் என்பதை விட, தேசத்தின் பிரதான எதிர்க்கட்சி யார் என நிலை நாட்டும் ஓர் எத்தனம் என்று மனோ கணேசன் சுட்டிக் காட்டும் விடயம் முக்கியமானதுதான்.

எடுத்த விடயங்களுக்கு எல்லாம் நாடாளுமன்றத்தில் வாய்கிழியப் பேசுவதில் மட்டும் அர்த்தம் இல்லை. செயலில் மக்கள் கூட்டத்தை திரட்டி, தொடர்ந்து ஓர் அதிர்வு நிலையை எதிர்க்கட்சித் தலைவர் பேணாத வரை, அவர் நாடாளுமன்றத்தில் மாத்திரம்தான் அந்தப் பதவியை வகிக்க முடியும். முழு நாட்டுக்கும் அல்ல.

நாமல் ராஜபக்ஷ அணி கூட்டிக் காட்டிய கூட்டம் போல் ஒன்றை - அரசு எதிர்ப்புப் பேரணியை - சஜித் தரப்பு செயலில் நிரூபித்துக் காட்டும் வரை, எதிர்க்கட்சிப் பக்கத்தில் நாமல் அணியின் கை ஓங்குவதைத் தடுத்து நிறுத்த முடியாமல்தான் இருக்கும்.





# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் மகாபாரத சொற்பொழிவும் உதவி வழங்கலும்

வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடத்தப்படும் நிகழ்வில் நேற்று வெள்ளிக்கிழமை மகா பாரத சொற்பொழிவும் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா உதவி வழங்கலும் இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்ற நிகழ்வில் ஆன்மீக உரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

இதேவேளை உதவிகளாகச் சோந்தம்பை, கம்பர்மலையை சேர்ந்த விசேட தேவைக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு ருத்துவ செலவுக்காக 50 ஆயிரம் ரூபா நிதியும், மாத்தறை பகுதியில் ஆலய மண்டப கட்டுமானப் பணிக்காக முதலாம் கட்ட நிதியாக ஒரு லட்சம் ரூபா நிதியும் திருகோணமலை ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள எழுத்துக் கல்லு மலை முருகன் ஆலயத்துக்கான கும்பாபிஷேக நிகழ்வுக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

முகத்தான்குளம் ஸ்ரீசித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் செட்டிக்குளம் அறநெறி ஒன்றியமும், செட்டிக்குளம் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் "தெய்வீக கிராம நிகழ்வின் அன்னதானச் செலவுகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்குத் தமிழர்களது கலாசாரத்தை அழிக்காத சுற்றுலாத்துறை அவசியம்

## கல்வி அபிவிருத்திக் குழுக் காப்பாளர் சச்சிதானந்தன் வேண்டுகோள்

(த.சுபேசன்)

தமிழ் மக்களுடைய வரலாறு, பாரம்பரியம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை சிதைக்காத வகையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களினுடைய சுற்றுலாத்துறை வளர்ச்சி காணப்பட வேண்டும். இதனை தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் ந.சச்சிதானந்தன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக ஊடகங்களுக்கு மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல்வாதிகள் அரசியலுக்காக மாத்திரம் கோஷங்களை எழுப்பாமல், கலாசார விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

தேசியம் பேசும் அரசியல்வாதிகள் கலாசார விடயத்தில் கண்டும் காணாமலும் இருப்பது எமது தமிழர்களுடைய கலாசாரத்தை அழிக்கும் செயல்பாடாகவே அமையும். தமிழர்களுடைய கலாசாரம் பல விதங்களாக மருவி வருகின்றன.

தமிழ் மக்களுடைய உடைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அதே நேரம் உணவு, வழிபாட்டு முறைமை, திருமண வைபவம் எனப் பல விடயங்களிலும் தமிழர்களுடைய கலாசாரம் மாறி வருகின்றது.

எமது மாகாண சுற்றுலாத் துறையின் வளர்ச்சியால் நாம் ஒருபுறம் மகிழ்ச்சி அடைந்தாலும், மறுபக்கம் அதன் வளர்ச்சியானது எமது கலாசாரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பது வருத்தமளிக்கின்றது.

புலம்பெயர்ந்த மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வடபகுதிக்கு வரும் போது, அந்தக் கலாசாரத்தினை வட பகுதி மக்கள் பின்பற்றத் துணிகின்றனர்.

அத்துடன் எமது பாரம்பரிய உணவுகளைப் புறந்தள்ளி, விரைவு உணவுகளுக்கு மக்கள் அடிமையாகிவிட்டார்கள்.

இன்றைய இளம் தமிழ்த் தலைமுறைகளின் பெயர்களில் ஒரு தமிழ்ப் பெயரை கூட நாம் கண்டுகொள்ள முடியாமல் இருக்கின்றது. முன்பு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார்கள், ஆனால் இன்று தமது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகளுக்குத் தமிழரென்று அடையாளம் காண முடியாத அளவுக்குப் பெயர்களைச் சூட்டி வருகின்றனர். பாடசாலை வரவு இடாப்பில் கூட ஒரு தமிழ்ப் பெயரைக் காண்பது கூட அரிதாகவே உள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கலாசார சீர்கேட்டின் விளைவாக இன்று ஆலயங்களுக்குச் சேலை கட்டிச் செல்லும் பெண்களும், வேட்டி கட்டிச் செல்லும் ஆண்களும் அருகிவிட்டனர்.

திருமணங்கள், மரணச் சடங்குகளில் கூடப் பாரிய மாற்றங்கள் எமது தமிழர் பிரதேசத்தில் ஏற்பட்டுவிட்டன.

பெரும்பாலான நிகழ்வுகளில் விருந்தினர்கள் மேற்கத்தேய நாட்டு உடைகளுடன் வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு எமது சமய முறைப்படி மாலை, பொன்னாடை அணிவிப்பது ஒரு விசித்திரமான நிகழ்வாக உள்ளது. பாடசாலைகளில் 'தமிழ்த் தாய் வாழ்த்து' இசைப்பது கூட அருகிவிட்டது.



இந்தக் கலாசார மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல. அதிபர்கள், ஆசிரியர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். கல்வி கலாச்சார அமைச்சுக் கூட இவ்வாறான விடயங்களைப் பொருட்படுத்துவதில்லை.

எனவே, தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்த் தேசியத்தை ஒருபுறம் பார்க்கும் அதே வேளையில், தமிழ் மக்களுடைய கலாசாரம் அழிந்துபோகாமல் பார்க்க வேண்டும்.

இன்று பல இளைஞர் யுவதிகள் கலாசாரச் சீர்கேட்டுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இது எமது சமூகத்துக்கு ஆரோக்கியமானது அல்ல.– என்றார்.



# கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் 204 ஆவது கொடியேற்றம் ஆரம்பம்!

(யூ.கே. காலத்தீன்)

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீஃபில் வருடாந்தோரும் இடம்பெறும் காரணக் கடல் எஜமான் குத்புல் மஜீத், பர்துல் வஹீத், ஷாஹுல் ஹமீது, ஸெய்யித் அப்துல் காதிர் நாகூரி மாணிக்கப்பூரி பாதுஷா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் நினைவாக 204 ஆவது கொடியேற்று பெருவிழாவும் 460 ஆவது மனாகிப் மஜ்லிஸும் இவ்வருடமும் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகின.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இருந்து கொடி ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு வெகு விமர்சையாக இடம்பெற்று ஏழு அடுக்கு மினராவில் கொடியேற்றி வைக்கப்பட்டது.

இங்கு தினமும் நாளாந்த நிகழ்வுகளாக கத்முல் குர்ஆன் மஜ்லிஸ், மீரான் சாஹிப் மௌலித் மஜ்லிஸ், றிபாயி ராத்திப் மஜ்லீஸ், ஜியாரத் மஜ்லிஸ், சன்மார்க்க பயான் மஜ்லிஸ், விசேட இஸ்லாமிய பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் சங்கைக்குரிய சாதாத்மார்கள், உலமாக்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அகில இலங்கை பக்கீர் ஜமாஅத்தினரின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றன.

இறுதித் தினமான டிசெம்பரைத் 03 ஆம் திகதி புதன் கிழமை லுஹர் தொழுகையின் பின்னர் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கப்பட்டு, அன்றைய தினம் அஸர் தொழுகையுடன் நிகழ்வு நிறைவுறும்.

கொடியேற்று நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசா அதிபர் சிந்தக அபேவிக்ரம, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எம்.ஐ.எம். பிர்னாஸ், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி லசந்த களுவாராச்சி கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், முன்னாள் உறுப்பினர் ஏ.எம். ரியாஸ், கல்முனை பிரதேச செயலக கணக்காளர் கே.எம்.எஸ் அமீர் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.எம் மஜீட், நிர்வாக உத்தியோகத்தர் ஏ,சி.எம் பழீல் கல்முனை முஹைறத்தீன் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் நாகூர் ஆண்டகை தர்ஹா சரிப்பின் செயலாளர் எம்.எச்.எம் முபாரிஸ், பொருளாளர் எம்.ரிப்னாஸ் உட்பட நாகூர் ஆண்டகை தர்ஹா சரிப் நிர்வாகிகள், மற்றும் கல்முனை தரவை பிள்ளையார் கோவில் ஆலய நிர்வாகிகள் முக்கிய பிரமுகர்கள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





**ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு அரசின் ஆற்றுப்படுத்தல் என்ன?**

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து நல்லிணக்க சைகையைக் காட்டுங்கள்!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



(விஜயரத்தினம் சரவணன்)

ஆரோக்கியமான சமூகம் ஒன்றை நோக்கிய ஆரோக்கிய வாழ்வு எனும் இலக்கோடு 2026 ஆம் ஆண்டுக்கான சுகாதாரத்துறை சார்பான திட்டங்கள் முன்னகர்த்தும் இந்த அரசு, நினைவு தெரிந்த நாள் முதல் சிறையில் தந்தை இருக்க வளரும் காலத்தில் தாயையும் இழந்து பின்னர் கடந்த புதன்கிழமை வளர்த்த பாட்டியையும் இழந்து தனித்திருக்கும் தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு இந்த அரசின் 2026 இன் வரவு - செலவுத் திட்டம் என்ன ஆற்றுப்படுத்தலை வழங்கப்போகின்றது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு இலங்கைத் தீவின் நல்லிணக்கத்துக்கான முதற்படியே சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைதான் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்து நல்லிணக்கத்துக்கான சைகையை காட்டுமாறும் அரசை வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆரோக்கியமான சமூகமொன்றை நோக்கிய ஆரோக்கிய வாழ்வு எனும் இலக்கோடு 2026 ஆம் ஆண்டுக்கான அரசின் சுகாதாரத்துறை சார்பான திட்டங்கள் முன்னகர்த்தப்படுகின்றன.

ஆரோக்கியமான சமூகமொன்றை உருவாக்குவதற்கு தனிமனிதனாக, குடும்பமாக, சமூகமாக நாம் ஆரோக்கியமாக வாழவேண்டும். தனிமனித ஆரோக்கியம் என்பதும் தனித்தே உடல் சார்ந்தது மட்டுமன்று. உடல், உளம், சமூகத்தின் கூட்டு விளைவுகளால் தனிமனித ஆரோக்கிய நிலை தீர்மானிக்கப்படுகிறது.

நினைவு தெரிந்த நாள் முதல் சிறையிலே தந்தை இருக்க வளரும் காலத்தில் தாயையும் இழந்து பின்னர் கடந்த புதன்கிழமை வளர்த்த பாட்டியையும் இழந்து தனித்திருக்கும் இந்த ஈழத்தின் சிறுமியை, சிறுவனை தமிழ் அரசியல் கைதியாக 17 ஆண்டுகள் சிறைக்குள் வாடும் தம்பி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு இந்த அரசின் 2026 இன் வரவு - செலவுத் திட்டம் என்ன ஆற்றுப்படுத்தலை வழங்கப்போகிறது.

அந்தப்பிள்ளைகள் இந்த இனவாத மண்ணில் பிறந்ததைவிட வேறென்ன தவறு செய்தனர். ஆரோக்கியமான சமூகமொன்றை நோக்கிய ஆரோக்கிய வாழ்வை உங்கள் அரசு இந்தத் தீவில் வாழும் அந்தப்பிள்ளைக்கு வழங்காதா.

இந்தத் தீவில் ஆயுதங்களை விரும்பி ஏற்ற இனமல்ல எங்கள் இனம். அரசியல் வழியில் போராடித்தோற்று ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். 2009 உடன் ஆயுதமும் மௌனிக்கப்பட்டது. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே மாறிவரும் அரசுகள் முயல்வதாக அறிக்கைகள் காட்டுகின்றன. செய்திகளில் அரசுகளின் சார்பாளர்களாக நீங்கள் மாறி மாறி எங்களை ஏமாற்றுகிறீர்கள்.

எங்கள் அயல்வீட்டுப்பிள்ளை – தம்பி ஆனந்தசுதாகரின் மகன் மற்றும் மகளைப் போல பிறந்தது முதல் இறக்கும் வரை பிள்ளைகளும், சகோதரர்களும், மனைவிகளும், கணவர்மாரும், தந்தையரும் தாய்மாரும், பாட்டன், பாட்டிமாருமாக ஒட்டுமொத்த ஈழத்தமிழினமும் இன்னமும் வடுக்களோடு தான் நகர்கிறோம். எங்களுக்கு ஆரோக்கியமான சமூக வாழ்வுக்கான கதவை உங்கள் அரசு எப்போது திறக்கப்போகிறது.

இந்தத்தீவின் நல்லிணக்கத்துக்கான முதற்படியே — எங்களுக்காக குரல்கொடுத்து இப்போதும் சிறையில் வாடும் எங்களின் உறவுகளின் விடுதலைதான். தயவுசெய்து எங்கள் உறவுகளை விடுவித்து நல்லிணக்கச் சைகையை காட்டுங்கள். உங்கள் வரவு - செலவுத் திட்டம் முன்மொழியும் ஆரோக்கிய வாழ்வுக்கான வழியை ஈழத்தமிழர்களுக்கும் திறந்துவிடுங்கள் .- என்றார்.

# அகில இலங்கை சைவப் புலவர் சங்க 62 ஆவது பட்டமளிப்பும் சைவ மாநாடும்

(த.சுபேசன்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் 62 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதி இலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் க.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வானது, தவத்திரு வேலன் சுவாமிகள், சிவஸ்ரீ ச.சோமஸ்கந்த குருக்கள், சிவஸ்ரீ கு. தியாகராஜ குருக்கள், ஸ்ரீலஸ்ரீ கைலாசநாத குருக்கள் ஆகியோரின் அருளாசிகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடம் மற்றும் சமஸ்கிருதத்துறைத்தலைவர், சிவஸ்ரீ பாலகைலாசநாத குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர், செந்தமிழ்ச் சொல்லறிவி ச. லலீசன், சித்த மருத்துவர் கணேசலிங்கநாதன் சிவத்திரு மணிவண்ணன் ஐயா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வரணி வடக்குக் கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் தேவதானத்தைச் சேர்ந்த க.இராசையா, வே. இரகுநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழாவில் 2024 ஆம் ஆண்டுத் தேர்வில் சித்தி பெற்ற சைவப் புலவர்கள் மற்றும் இளஞ்சைவப் புலவர்களுக்கான கௌரவிக்கப்படவுள்ளனர்.

62 ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கான பரிசில் வழங்குதல், கதாப் பிரசங்கப் போட்டி, சொற்பொழிவு உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



# மண்ணில் மறையாத வீரத்தின் சுவாசம்!

இன்றும்...
மண்ணில் ஒரு வாசனை உண்டு
உதிரத்தின் வெப்பம் காற்றோடு கலந்து
அமைதியை கத்தி கிழித்த காலத்தின் சுவடு அது

வானம் இன்று சற்று செம்போதி,
சூரியன் கூட தலை குனிகிறான்,
இரத்தத்தில் எழுதப்பட்ட சத்தியத்துக்கு
ஒளி கூட வணக்கம் செலுத்துகிறது

வீரம்...
கத்தி பிடித்த கையில்தான் இல்லை
தன் உயிரை ஒரு அர்த்தம் ஆக்க முடிந்த
இதயத்தின் உள் சுழலில் உள்ளது

அம்மா...
தன் மார்பின் உள்ளே
ஒரு போர்க் குரலை மறைத்து நிற்கிறாள்
அது அழுகை அல்ல –
அது பெருமையின் வெடிப்பு
முன் நிற்கும் அமைதியின் துடிப்பு.

மண்ணின் மேல் பதித்த காலடிகள்
இப்போது வேர் போல் ஆழமாகிப் போயின்
நாம் நடப்பது
அவர்கள் விட்டுச் சென்ற பாதையில்தான்
ஆனால் நிழல் மட்டும் நமக்கு சொந்தம்,
பாதை அவர்களின் சொத்து

நம் மொழி கூட
இன்று சற்று கரகரப்பாக ஒலிக்கிறது,
ஏனென்றால்
அதில் வரிகளுக்கு இடையே
கரைந்த இரத்தத்தின் உப்பு கலந்திருக்கிறது

மாவீரர்...
இது புகழின் பெயரல்ல
இது ஒரு சுவாசம்
உயிர் துடிக்கும்போது
உள்ளே எழும் வலிமையின்
அமைதியான முழக்கம்...!

இன்று...
மலர்கள் விழவில்லை
மண்ணே மலர்ந்திருக்கிறது.



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை
மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.



ஜிந்துஜா விஜயகுமார்
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# மறைந்து போகும் பெட்டிக்கடைகள்!

**(நவீன வணிகத்தின் மாபெரும் அலைக்கு எதிராகச் சிறு பெட்டிக்கடைகள் போராடுகின்றன. Food City போன்ற மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட்களின் வருகையால் சிறு பெட்டிக்கடை வியாபாரிகளின் வியாபாரத் தாக்கம் - ஒரு விரிவான விமர்சனப் பார்வை.)**

சமூக – பொருளாதார அமைப்பு வேகமாக மாறிக்கொண்டிருக்கும் இன்றைய காலத்தில், மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட்களின் வலையமைப்புச் சங்கிலிகள் நகரப் புறத்திலிருந்து கிராமப்புறங்கள் வரை விரிந்துகொண்டே செல்கின்றன. “நவீன வணிகம்”, “வசதி”, “உலகத் தர சேவைகள்” போன்ற சொற்கள் இந்த நிறுவனங்களின் பிரசாரக் கருவிகளாக இருந்தாலும், அவை வளர்ந்து வரும் போதெல்லாம் இதற்குள் மறைந்துபோகும் ஒரு அமைதியான உலகம் உள்ளது. அதுதான் சிறு பெட்டிக்கடை வியாபாரிகளின் தினசரி போராட்டம்.

பல நூற்றாண்டுகளாக உள்ளூர் சமூக வாழ்க்கையின் ஓர் அங்கமாக செயல்பட்டு வந்த இந்தச் சிறு பெட்டிக்கடைகள், இன்று பெரிய நிறுவனங்களின் நிழலில் நசுக்கப்பட்டு உயிர் துடிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. எதற்காக பெட்டிக் கடைகள் இந்தச் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளன? இதற்கு யார் காரணம்? இது உருவாக்கும் தாக்கங்கள் என்ன ? போன்ற பல கேள்விகளுக்கு விமர்சன நோக்கில் விடை காண்பது இன்றியமையாதது.

மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட் நிறுவனங்கள் மொத்தமான கொள்வனவு முறையில் ஒரே நேரத்தில் மிகப்பெரிய அளவில் பொருட்களை வாங்குகின்றன. இதனால் அவர்கள் மிகக் குறைந்த விலையில் பொருள்களைப் பெற்று, வாடிக்கையாளர்களுக்கு Special Offer, Season Sale போன்ற சலுகைகளைக் கொடுக்கின்றனர். அதற்கு மாறாக, சிறு பெட்டிக்கடைகளிலோ பொருள்களைக் குறைந்த அளவில் மட்டுமே வாங்க முடியும். பெட்டிக்கடை வியாபாரிகள் பொருள்களைச் சில்லறை விலையில் வாங்கிக் குறைந்த விலையில் விற்க முடியாமல் நட்டத்தில் தள்ளப்படுகின்றனர்.

இதன் விளைவாக,

- பெட்டிக்கடை வியாபாரிகளின் தினசரி வருமானம் குறைதல்,
- வாடிக்கையாளர்களை இழத்தல்,
- கடன் வாங்கி பொருள்கள் வாங்கும் நிலை ஏற்படுதல்
- இறுதியில் கடை மூடுதல்

போன்ற நெருக்கடிகளுக்கு தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகின்றார்கள்.

அடுத்து, சூப்பர் மார்க்கெட்டுகள் வாடிக்கையாளர்களை கவரும் நோக்குடன் தங்களது கடைகளை அழகு படுத்துதல், குளிரூட்டப்பட்ட வசதி, வங்கி அட்டை மூலம் பணம் செலுத்தும் வசதி போன்ற நவீன அம்சங்களுடன் வடிவமைக்கின்றன. இத்தகைய சூழலில் பொருள்களை வாங்குவதற்கு மக்கள் அதிகம் விரும்புகின்றனர். இதனால் மக்கள் தங்களது வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் பொட்டிக்கடைக்கு செல்லும் பழக்கம் குறைந்து வருகிறது.

இது மாத்திரம் இன்றி, இன்றைய நுகர்வோர் மனதில் ஏற்படும் சில மாறுதல்களும் பெட்டிக் கடைகளில் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகின்றன. அதாவது,

- அனைத்தும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய முடியும் என்ற எண்ணம்.
- கண்களை கவரும் விதத்திலானஒழுங்குபடுத்தல் முறைகள்.
- பெரும்பாலும் ஒரே மாதிரியான தரமான பொருள்கள்
- தள்ளுபடி என்ற ஆவல்.

இந்த மாற்றங்கள் மனித உறவுகளின் அடிப்படையில் இயங்கும் பொட்டிக்கடைகளை பின் தள்ளுகின்றன. உண்மையில் பெட்டி கடை வியாபாரம் என்பது வணிக நோக்கத்தையும் தாண்டி, மக்களுக்கு இடையிலான ஒரு உறவு பாலமாகவும் தொழிற்படுகின்றது. அதாவது பெட்டி கடையில் ஒரு பொருளை வாங்க செல்லும்போது அங்கு இருப்பவர்கள் நமது உறவினர்களாகவோ அல்லது நமக்கு பழக்கப்பட்டவர்களாகவோ இருப்பார்கள். இதனால் பொருள்களை வாங்குவதையும் தாண்டி அவர்களுடன் பல விடயங்கள் கதைத்து

தொடர்ச்சி▼




# மறைந்து போகும் பெட்டிக்கடைகள்!

தொடர்ச்சி▲

உறவாடுவதற்கான ஒரு வாய்ப்பு அங்கு கிடைக்கின்றது. இது சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

இது ஒருபுறமென்றால் மறுபுறம், சிறு பெட்டிக்கடை என்பது ஒரு வணிகம் என்பதையும் தாண்டி, அது ஒரு சாதாரண குடும்பத்தின் வருமான ஆதாரமாகவும் காணப்படுகின்றது. இவற்றை எல்லாம் மறந்த இன்றைய சமூகம் நாகரீகத்தின் பின்னால் செல்கின்றது என்ற பெயரில் பெட்டிக்கடை வியாபாரிகளை நெருக்கடியில் விட்டு விடுகின்றார்கள். இதனால் அந்தப் பகுதியின் பாரம்பரிய பொருளாதார அமைப்பே  நிர்மூலமாகின்றது. உதாரணமாக, ஒரு பெரிய வணிக நிறுவனம் திறக்கப்படும்போது அருகிலுள்ள 5 –10 பெட்டிக்கடைகளின் வருமானம் 30–50% வரை குறைகிறது.

சிறு கடைகளின் வருமானம் குறையும்போது, அதன் செலவினங்களும் குறைகின்றன. இதனால் உள்ளூர் வணிகத்தை நம்பி இருக்கும் சுய தொழிலாளர்கள்  உள்ளூர் உழவர், சில்லறை சப்ளையர்கள், சிறு உற்பத்தியாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் உள்ளூர் பொருளாதார சுழற்சி மெதுவாகச் சிதைவடைகிறது. சிறு பெட்டிக்கடைகளில் உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களே பெரும்பாலும் விற்கப்படுகின்றன.

உதாரணமாக  வீட்டில் தயாரிக்கப்பட்ட சத்தான உணவுப் பொருள்கள்,  உள்ளூர் பொருள்கள், உள்நாட்டு பழச்சாறு, சிறு உழவர் பொருள்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

ஆனால் சூப்பர் மார்க்கெட்களின் வலையமைப்பு நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான பொருள்களை பெரிய நிறுவனங்களுடன் மட்டுமே இணைத்து வைத்திருக்கின்றன. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் சந்தை வாய்ப்புகள் குறைந்து, அவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

இவைஅனைத்தையும்தாண்டி, ஒருபெட்டிக்கடை என்பது பொருள்கள் வாங்கும் இடம் மட்டுமல்ல அது ஒரு சமூக தகவல் மையம். அங்கு நடந்துகொள்ளும் தினசரி உரையாடல்கள் மனிதர்களை இணைக்கின்றன. கடந்த வாரம் வீட்டில் விழா நடந்ததா?, உங்க பையன் கூலுக்கு போயிட்டானா?, அம்மாவுக்கு மருந்து வாங்க வேண்டும்னு சொன்னீங்களே? போன்ற இத்தகைய மனிதத் தொடர்புகள்தான் ஒரு சமூகத்தின் நீட்சியான பிணைப்பாக அமைகின்றன.

சூப்பர் மார்க்கெட்  பெரிய நிறுவனங்கள் இயங்கும் முறை முழுவதும் வாடிக்கையாளர் மற்றும் விற்பனையாளர் இடையேயான மனித நெருக்கம் இல்லாத, ஒரு இயந்திர சூழலை உருவாகிறது. இதனால் சமூக உறவுகள் விரிசல்கள் பெறுகின்றன. நவீன யுகத்தின் அபரிதமான வளர்ச்சியில் சூப்பர் மார்க்கெட்டுகளின் வளர்ச்சியை நிறுத்த முடியாது. ஆனால் சிறு வியாபாரிகள் வாழ்வதற்கான சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியம்.

அதாவது பெட்டிக்கடை வியாபாரிகளுக்கு தேவையான நம்பிக்கை அடிப்படையிலான கடன் வசதிகளை வழங்க வேண்டும். உள்ளூார் உற்பத்திகளை முன்னிறுத்துதல். அதாவது, மக்கள் விரும்பும் வீட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களை முக்கியமாக விற்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

இன்றைய நுகர்வோரை ஈர்க்கும் வகையில் பொட்டிக்கடைகளின் வியாபார முறைகளை மாற்றுதல். நெருக்கமான வாடிக்கையாளர் உறவை மீட்டெடுத்தல். அதாவது தினசரி வாடிக்கையாளர்களுடன் தனிப்பட்ட கவனம், நேரடி தொடர்பு, சமூக ஈடுபாடு போன்றவை சிறுக் கடைகளின் வலிமையாகும்.

பெரிய வணிக மையங்கள் நவீன வாழ்வின் ஒரு அடையாளமாக இருந்தாலும், அவை சிறு பெட்டிக்கடை வியாபாரிகளுக்கு ஏற்படுத்தும் தாக்கம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. விலை போட்டி, நுகர்வோர் நடைமுறை மாற்றம், உள்ளூர் பொருளாதார சிதைவு, சமூக உறவு அழிவு உள்ளிட்ட பல தளங்களில் அதன் தாக்கம் தீவிரமாகப் பிரதிபலிக்கின்றது.இது ஒரு சாதாரண வணிகப் போட்டி அல்ல. இது ஒரு பாரம்பரிய வாழ்க்கை முறையின் அழிவாகும்.

ஆகையால், வளர்ச்சியும் நவீன வசதியும் தேவையானவை என்றாலும், அதே அளவில் சிறு வியாபாரிகளின் பாதுகாப்பும் அவசியம். அரசு, சமூக அமைப்புகள், நுகர்வோர் என அனைவரும் இணைந்து சிறு வியாபாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே உள்ளூார் பொருளாதாரமும் சமூகத் தளமும் சீராக நீடிக்கும். நம்முடைய பெட்டிக்கடை வியாபாரிகளைத் தோள் கொடுத்து நாமே உயர்த்தி விட வேண்டும்.



# மூவின சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ அரசு வழி ஏற்படுத்துமா...?

**-கிண்ணியான் -**

நாட்டில் இன. மத ஒற்றுமை என்ற நிலையில் பேசப்பட்டாலும் இனவாதத்தை தூண்டி விட்டு நாட்டை நாசமாக்குவதற்கு துணை போகும் நிலை காணப்படுகிறது. திருகோணமலை டச்பே கடற்கரை பகுதியில் அண்மையில் சட்ட விரோதமாக புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. கரையோர பாதுகாப்பு திணைக்களம் இதனை நிறுத்திய போதும் இரவோடு இரவாக பௌத்த துறவிகள் இணைந்து குறித்த பகுதிக்குள் புத்தர் சிலையை வைத்ததால் பெரும் பதற்ற நிலை அங்கு உருவானது.

திருகோணமலை துறை முகப் பொலிஸாரால் இது நிறுத்தப்பட்ட நிலையில் புத்தர் சிலை எடுத்துச் செல்லப்பட்டது. மறு நாள் மீண்டும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் ”பாதுகாப்புக் காரணம் கருதியே புத்தர் சிலை அகற்றப்பட்டது. அது மீண்டும் வைக்கப்படும் என கூறியிருந்தார்.

மீண்டும் 17.11.2025 ஆம் திகதி அன்று பொலிஸாரின் பாதுகாப்புடன் அதே இடத்தில் சிலை வைக்கப்பட்டது.

சட்டத்தை மீறிய வகையில் இவ்வாறாக தமிழர் தாயகங்களில் சிலை வைப்பு விவகாரம் என்பது சாதாரணமாக நிகழ்கின்றது. இது பற்றி தமிழ் கட்சிகளை சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் பல கருத்துக்களை கூறியிருந்தனர். இவ்வாறான நிலையில் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட ஞான சார தேரர் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டு இனவாத கருத்துக்களைக் கூறியிருந்தார். நாட்டில் இனவாதமற்ற நிலை ஒழிக்கப்படும் என ஜனாதிபதி ஆரம்பம் தொட்டே கூறி வந்தார்.

ஆனால் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் தனியார் காணி அபகரிப்புக்கள் புனித பூமி என்ற போர்வையில் அபகரிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா வெந்நீர் ஊற்று தொல்பொருள் திணைக்கள கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரிசி மலையில் தமிழ் நிலங்களில் ஆசிரி கந்த புராண ராஜமஹா விகாரை (Asiri Kanda Purana Rajamaha Viharaya) கட்டப்பட்டு இருக்கின்றது. இப் பகுதியில் பூஜா பூமி எனும் பெயரில் ஆயிரக் கணக்கான விவசாய நிலங்களை பனாமுற தேரர் கையகப்படுத்தியுள்ளார் என்பதுடன் தொல்பொருள் என்ற போர்வையிலும் அபகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த திருகோணமலை சிலை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். நாட்டில் இனவாதத்தை தோற்றுவிக்க யாராவது முயற்சி செய்தால் அதற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று கூறினார்.

சட்டவிரோதமாக திருகோணமலை மாநகர சபைக்கு சொந்தமானதும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிக்குள் புத்தர் சிலையை வைத்த போது இந்தச் சம்பவம் மேலும் வலுவடையத் தொடங்கியது.

இவ்வாறான நிலையில் இந்தச் சம்பவங்கள் பற்றி பலரும் பல கருத்துக்களைக் கூறி வருகின்றனர். இது குறித்து திருகோணமலையை சேர்ந்த அரசியல் ஆய்வாளரான ஏ.யதீந்திரா கூறுகையில்,

“வடக்கு கிழக்கில் புத்தர் சிலை விவகாரம் புதிய விடயமல்ல – தமிழர் தேசிய இனப்பிரச்சினை கூர்மடையத் தொடங்கிய காலத்திலிருந்து”. இந்தப் பிரச்சினையும் தொடர்கின்றது. இவ்வாறான பின்புலத்தில்தான் திருகோணமலை கடற்கரைக்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலை விவகாரத்தையும் நோக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசு இனவாதமற்ற

தொடர்ச்சி▼



# மூவின சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ அரசு வழி ஏற்படுத்துமா...?

தொடர்ச்சி▲

ஆட்சியொன்றை முன்னெடுப்பதாக கூறிவரும் நிலையில்தான் குறித்த புத்தர் சிலை விவகாரம் அதிக கவனத்தைப் பெற்றிருக்கின்றது. அரசு ஆரம்பத்தில் இந்த விடயத்தைச் சட்டத்தின் அடிப்படையிலேயே கையாண்டிருந்தது. புத்தர் சிலையை அகற்றுமாறும் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் தென் இலங்கையின் எதிர்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நின்று, இனவாத அரசியலுக்குப் புத்துயிரளிப்பதற்கான பிரச்சாரங்களை முன்னெடுத்த போது, அரச தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது. என்னைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் சஜித் பிரேமதாசவின் இனவாதப் போக்குத்தான் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமானது. தன்னை சிறுபான்மை மக்களுக்கு ஆதரவானவர் போன்று காண்பித்துக் கொள்ளும் பிரேமதாச, இனவாத ஓட்டப்பந்தயத்தில் நான்தான் முதலாவது என்பது போன்றே நடந்து கொண்டிருக்கின்றார்.

ஒப்பீட்டடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அரசு சில விடயங்களில் முன்னேற்றகரமானதாக இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அதற்காக அவர்கள் ஒரே பாய்ச்சலில் சிங்கள பௌத்த தேசியவாதக் கட்டமைப்பிலிருந்து வெளியில் வந்துவிடுவார்கள் என்று எண்ணினால் அதுவும் தவறானது.

புத்தர் சிலை விடயத்தில், இதுவரையில் எத்தனையோ எதிர்ப்புக்கள் காண்பிக்கப்பட்ட போதிலும் கூட அதனால் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. உண்மையில் தமிழ் எதிர்ப்புக்கள் இறுதியில் சிங்கள பௌத்த கட்டமைப்புக்களை மேலும் பலப்படுத்தவே பயன்பட்டிருக்கின்றன.

என்னைப் பொறுத்தவரையில் தமிழர்கள் தங்களின் ஆற்றல் அறிந்து சத்தம் போட வேண்டும். இதனை கண்டும் காணமால் விடுவதுதான் புத்திசாதுர்யமானது. ஏனெனில் நீங்கள் எதிர்த்தால் இன்னும் தீவிரமாக பௌத்த மயமாக்கல் நிகழ்வதற்கான வாய்ப்பே அதிகமாகத் தெரிகின்றது. இந்த விடயத்தில் தென்னிலங்கை கட்சிகள் அனைத்தும் ஓரணியில்தான் நிற்கும். அதே வேளை இந்த விடத்தில் இந்தியாவின் ஆதரவோ அல்லது மேற்குலகநாடுகளின்ஆதரவோதமிழரின்பக்கமாகஇருக்காது. அவர்களைப் பொறுத்தவரையில் இதனை ஒரு உள்ளக விடயமாகவே நோக்குவார்கள்.

எனவே தமிழ் மக்கள் ஒப்பீட்டடிப்படையில்தான் விடயங்களை நோக்க வேண்டும். இதனை குறைந்தளவு பிசாசுத் தன்மை என்று கூறுவதுண்டு. அனைத்து கட்சிகளுமே பிரச்சினைக்கு உரியதுதான் ஆனால் ஒப்பீட்டடிப்படையில் இன்றைய சூழலில் யார் பொருத்தமான ஆட்சியாளர் என்பதை உற்று நோக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் திருகோணமலைபுத்தர்சிலைவிவகாரத்தைமுன்வைத்து தேசிய மக்கள் சக்தி அரசு தொடர்பில் கறுப்பு வெள்ளையாக விடயங்களை நோக்கக் கூடாது.” எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் குறித்த பகுதிக்குள் மேலதிக கட்டட நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ எதுவும் செய்யவோ கூடாது எனவும் கட்டளையிடப்பட்டது.

வடக்குக் கிழக்கைப் பொறுத்தமட்டில் தமிழ், முஸ்லீம் மக்களின் பல காணிகள் அடாத்தாக கையகப்படுத்தப்படுகிறது. குறிப்பாக பூஜா பூமி என்ற போர்வையிலும் தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாக கூறியும் அபகரிக்கின்றனர். தேசிய மக்கள் சக்தி அரசாலும் இது போன்ற இனவாத செயலுக்கு இடமளிக்க கூடாது என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை

தொடர்ச்சி▼



# மூவின சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ அரசு வழி ஏற்படுத்துமா...?

தொடர்ச்சி▲

பெற்ற எதிர்க் கட்சி தலைவர் சஜீத் பிரேமதாசவின் நாடாளுமன்ற உரையில் மேற்குறித்த விடயம் தொடர்பில் அது அவ்வளவுக்கு சாதகமாக அமையவில்லை என்பதை தமிழ் மக்களின் குரல்களின் மூலமாக காண முடிகிறது.

இந்தச் சம்பவம் பற்றி திருகோணமலையை சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் கு.செந்தூரன் தெரிவிக்கையில்,

“திருகோணமலையில் நடைபெறும் அசம்பாவிதங்கள் பல தரப்புக்களால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டது.கடலோரப்பிரதேசங்களில்இடம்பெற்றகட்டுமானங்களை அகற்றக்கோரிய இடத்தில் தற்போது அடுத்த கட்டமாக பிக்குமாரால் அடாத்தாக புத்தர் சிலை வைக்க முற்பட்டனர். அதன் அடிப்படையில் மக்களாலும் அரசியல்வாதிகளாலும் பல அழுத்தங்கள் கொடுத்த பின்னர் இரவு பாதுகாப்பு படையினரால் அகற்றப்பட்டது.

இப்போது மாற்றீடான அழுத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஆனந்த விஜேபால, சிலையின் பாதுகாப்பு கருதியே அகற்றப்பட்டது மீண்டும் அதே இடத்தில் சிலையை வைப்போம் என்று தெரிவித்துப் புத்தர் சிலை வைப்பது திருகோணமலைக்கு புதிதான விடயமல்ல. எத்தனை ஆயிரம் புத்தர்கள் வைத்து ஆயிரக்கணக்கான மக்களையும் கொன்று புதைத்து அடாத்தாக இடங்களை பிடிக்கும் செயலாகவே நாங்கள் பார்த்து கொண்டிருக்கிறோம். இப்போதும் புதிய அரசு எமக்கு தீர்வு தரப்போகின்ற அரசு அல்லது மிகப் பெரும்பான்மையுடன் இனவழிப்புகளுக்கு எதிரான அரசு என்று சொல்லப்படுகின்ற அநுர அரசு கூட மகா நாயக்க தேரர்களதும் அல்லது சிங்கள பௌத்த பேரினவாதிகளதும் எடுபிடிகளாகவே இருக்கின்றனர் என்பதை தற்போதைய நிகழ்வுகள் காட்டுகிறது.

ஆகவே எந்த தமிழர்களுமே இந்த சிங்கள அரசுகளை நம்புவதற்கு தயாராகவில்லை.

முதலில் வலியுறுத்தியது போல எந்த மக்கள் அல்லது எந்த ஊடகங்கள் இவெளிநாட்டு

அமைப்புக்கள் சிங்கள டயஸ்போராக்கள் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக

ஆக்கினார்களோ அதே அவர்கள் ஜே.வி.பி. எனும் அரசாங்கத்தை அதே முகத்துடன்

தேசிய மக்கள் சக்தியை நாட்டின் ஜனாதிபதியாக்கியுள்ளார்கள். அரசாங்கங்கள் மாறுகின்றன கட்சிகள் மாறுகின்றன. ஆனால் காட்சிகள் மட்டும் தமிழர்களுக்கு எதிராகவும் அல்லது தமிழ் தேசியத்துக்கு எதிராகவும் தமிழின மக்களுக்கு நியாயம் கொடுக்க முடியாத அரசாங்கமாக இன்று வரைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன.

இந்தச் சம்பவம் மன அழுத்தங்களை மட்டுமல்ல தமிழ் மக்களிடையே அவலத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. யுத்தத்தால் அழிந்து காயப்பட்டிருக்கின்ற தமிழ் மக்களை மேலும் காயப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். இதுதான் உண்மையாகவும் வரலாற்று தொடர் கதையாகவும் உள்ளது. இன்று மட்டுமல்ல இனியும் இது தான் நடக்கப்போகின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள் வலி சுமந்து தான் வாழ வேண்டிய நிர்ப்பந்தங்களுக்குள் இருக்கின்றோம். எந்த அரசாங்கத்தையும் நம்புவதற்கு நாங்கள் தயாராக இல்லை. அநுர தோழர்கள் என தமிழ் மக்கள் கூட போனார்கள். அவர்கள் கூட வெட்கப்பட்டு வேதனைபடக் கூடிய நிகழ்வாக நடந்து கொண்டிருக்கிறது இந்தச் சம்பவம்.” எனவும் கூறினார்.

மத உரிமைகளுடன் வாழும் உரிமை இந்த நாட்டில் அனைவருக்கும் உண்டு என்பதை இலங்கை அரசியலமைப்பின் 2 ஆம் குடியரசு யாப்பில் கூறப்பட்ட போதிலும் அத்து மீறிய சிலை வைப்பு ஊடாக வணக்க ஸ்தலங்கள் அமைப்பது தொடர்பில் சட்டரீதியாக கூறவில்லை.

இனவாதத்துக்கு இடமில்லை என்பதை தற்போதுள்ள அரசாங்கம் இச் சம்பவம் தொடர்பில் தெளிவாக அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல திறம்பட செயற்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன இது விடயமாக மாவட்ட செயலகத்தில் குறித்த பௌத்த பிக்குகளுடன் கலந்துரையாடிதுள்ளார். இதன்போது அவர் தெளிவாக திருகோணமலை பற்றிக் கூறியுள்ளார்.

வெளியில் உள்ள சிலர்தான் இங்கு திருகோணமலையில் இனவாதத்தை தூண்ட நினைத்தனர். திருகோணமலையை நேசிப்பவர்களுக்கு மட்டுமே திருகோணமலை சொந்தமாகும் எனவும் கூறினார்.

இது இவ்வாறிருக்க திருகோணமலையில் மூவின சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழவும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் அநுர குமார அரசாங்கம் வழியமைக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



# யாழ்ப்பாணத்தில் சாதியினர் அமைப்பும் சமூக உறவுகளும் எனும் நூல் வெளியீடு!

**(பூ.லின்ரன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல்துறையின் ஏற்பாட்டில் எழுநா பதிப்பகத்தின் யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பும், சமூக உறவுகளும் எனும் கந்தையா சண்முகலிங்கம் எழுதிய புத்தக வெளியீடு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூக வியல்துறை தலைவர் கலாநிதி ச.சிறிகாந்தன் தலைமையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

வரவேற்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவி எம்.எச்.எவ் ஹனீபா நிகழ்த்தினார்.



தலைமையுரையினை சமூகவியல் துறை தலைவர் கலாநிதி ச.சிறிகாந்தன் நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து வெளியீட்டுரையைச்சமூகவியல்துறைசிரேஷ்டவிரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா நிகழ்த்தினார்.

மதிப்பீட்டுரைகளை அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம், வடமராட்சி வடக்கு பிரதேசசெயலக கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.மயூரரூபன் ஆகியோர் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கருத்துரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் நிகழ்த்தினார்.

இதில் முதல் பிரதியை ஆங்கில இலக்கியம் மற்றும் மொழியியல் துறை முதலவர் மகேந்திரம் திருவரங்கம் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராமிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல்துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.






# முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர் 11 ஆவது மாநாடு புதுக்குடியிருப்பில் நேற்று

(பா.சதீசன்)

மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகத்தின் மூலம் மக்களிற்கு வினைத்திறனுடைய சேவையை வழங்குவதனை இலக்காக் கொண்டு 2025 ஆம் ஆண்டுக்கான 11 ஆவது (இரண்டாவது சுற்றின் ஐந்தாவது) முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் மாநாடு நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக மாவட்ட பிரதேச செயலாளர் மாநாடு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரதேச செயலகத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டது.

இதன் பிரகாரம் இந்த ஆண்டுக்கான முதல் சுற்று மாநாடு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களிலும் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

மீண்டும் இந்த ஆண்டுக்கான இரண்டாவது சுற்றின் ஐந்தாவது பிரதேச செயலாளர் மாநாடு நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு வருகைதந்த மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் பிரதேச செயலகத்தின் சுற்றுப்புறச் சூழலை அலுவலக முறைமை என்பவற்றை முதலில் பார்வையிட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற பிரதேச செயலாளர் மாநாட்டில், கடந்த முறை நடைபெற்ற மாநாட்டில் கலந்துரையாடப்பட்ட பல்வேறு விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் முதலில் கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக அரசால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து பிரதேச செயலகங்களின் நிர்வாக, நிதி, திட்டமிடல் செயற்பாடுகள், முன்னேற்றங்கள், குறைபாடுகள், சமூக நலச்சேவை செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள், இந்த வருடத்தில் செயற்படுத்த வேண்டிய திட்டங்கள், 2025 வரவு செலவுத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் அதன் வேலைத் திட்டங்கள் தொடர்பிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் இனங்காணப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

முதலாவது சுற்று பிரதேச செயலாளர் மாநாட்டில் பிரதேச செயலக, மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். இம்முறை புதுக்குடியிருப்பு பிரதேச சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். அமைப்புக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.










# சரியான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் ஓயப் போவதில்லை!

## முத்துநகர் விவசாயிகளது போராட்டம் தொடர்கிறது



(ஏ.எச் ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் போராட்டம் ஓயப் போவதில்லை. தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம் என முத்து நகர் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக மழையையும் பாராது சத்தியாக் கிரக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தங்களது 351 விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை சீரழித்து தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக காணிகளை அபகரித்ததையிட்டே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது அங்குள்ள விவசாய குளங்களையும் மூடி குறித்த திட்டத்தை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணி என கூறி அடாத்தாக விவசாயிகளை வெளியேற்றி இதனை செய்து வருகின்றனர்.

800 ஏக்கர் அளவில் காணி சுவீகரிப்பு செய்யப்பட்ட நிலையில் குறித்த விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து வீதிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அபகரிக்கப்பட்ட காணியை மீளத் தருமாறும் அல்லது மாற்றீடாக காணிகளை விவசாய செய்கைக்காக வழங்குமாறும் கோரி பல போராட்டங்களை ஜனாதிபதி செயலகம் தொடக்கம் பிரதமர் செயலகம்வரை முன்னெடுத்த போதிலும் தீர்வு வழங்கப்படாமை மன வேதனை அடைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

1972 அம் ஆண்டு முதல் தங்களது ஜீவனோபாயமாக விவசாய செய்கையை முன்னெடுத்த வந்த முத்து நகர் விவசாயிகள் அநுர அரசாங்க ஆட்சியில் இவ்வாறு வீதியில் வெயில் மழையிலும் போராடி வருவது மக்களை கஷ்டத்–துக்குள் தள்ளும் ஆட்சியாக காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திருகோணமலை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறுபான்மை மக்களுக்கான தீர்வில் பின் தங்கிய நிலையில் உள்ளனர்.

எனவே முத்து நகர் விவசாயிகளின் கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை சத்தியாக் கிரகப் போராட்டம் தொடரும் என விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மயக்க மருந்து வழங்கும் நிபுணர் இல்லை!

## சிறிய சிகிச்சைகளுக்கும் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்படும் நோயாளர்கள்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மயக்க மருந்து வழங்கும் மருத்துவ நிபுணரை உடனடியாக நியமிக்கக் கோரி வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன்நேற்று வெள்ளிக்கிழமை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கும் நிறுவனமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை இயங்கி வருகிறது.

இருப்பினும் மாவட்ட பொது வைத்தியசாலையில் உரிய துறை சார்ந்த சேவைகளை வழங்குவதற்கான போதுமான வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையால் சிறிய விபத்து காயங்களுக்கும் மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகள் உடனடியாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு இடமாற்ற வேண்டியுள்ளது.

இதனால் நோயாளிகளுக்கும் நிர்வாகத்தினரும் இடையில் அதிருப்தி நிலை நீடித்துக் கொண்டே இருக்கிறது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டிருந்த மயக்க மருந்து வழங்கும் நிபுணர் இட மாற்றலாகி சென்ற நிலையில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு மயக்க மருந்து கொடுத்து சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை மன்னார் பொது வைத்தியசாலையில் நீடிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ் வைத்தியசாலைக்கு மயக்க மருந்து வழங்கும் வைத்திய நிபுணரை உடனடியாக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதன் மூலம் மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.–என்றுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர் உள்ளடங்களாக பலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.







# வர்த்தக வாணிப அமைச்சின் கீழான இந்த ஆண்டுத் திட்டங்கள் ஆராய்வு

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

மகளிர் விவகார அமைச்சு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், தொழிற்றுறை திணைக்களம் என ஒவ்வொரு திணைக்களத்தினதும் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டன. திட்டங்களை முன்னெடுப்பதிலுள்ள இடர்பாடுகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்), கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கோப்பாய் துயிலுமில்லத்தில் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பம்!

ஈழ விடுதலைக்காகத் தன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு, நேற்று மாலை யாழ்ப்பாணம்ஈ கோப்பாய் துயிலுமில்லம் அமைந்துள்ள பகுதியில் இடம்பெற்றது.

கோப்பாய் துயிலுமில்லம் காணப்பட்ட நிலப்பரப்பில் தற்போது இராணுவ முகாம் அமைந்துள்ள நிலையில், அதன் வாயிலின் முன்பாகப் பொது மக்கள் ஒன்றுகூடி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, தற்போதைய கல்லறை அமைந்துள்ள இடத்தில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நிகழ்வின் பிரதானமான ஈகைச் சுடரை, மாவீரர்கள் இருவரின் தாயார் ஏற்றி வைத்தார்.

இறுதியாக, விடுதலைப் போரில் உயிர் நீத்த மாவீரர்களின் பெயர்கள் அடங்கிய நினைவுப் பெயர்ப் பலகைகள் மக்களின் அஞ்சலிக்காக உணர்வு பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.











# உயிர்ச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பணியாற்றிய துணிச்சலான பத்திரிகையாளர் கானமயிலநாதன்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

(போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீரமாகத் துணிச்சலுடன் வழி நடாத்தியவர் ம.வ.கானமயில்நாதன். பேனாப் போராளியான மறைந்த கானமயில்நாதன், தமிழ் மக்களின் குரலாக என்றும் ஒலித்தவர். யாழில் துணிச்சல் மிக்க பத்திரிகையாளரான ம.வ.கானமயில நாதனின் நான்காம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அவரது நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.)

'ஈழத் தமிழினத்தின் ஏழு தசாப்தகால உரிமைப் போராட்டமும் அதற்காக அந்த இனம் செய்த - புரிந்த - வேள்வித் தவமும் சொற்களால் அடக்கிவிட முடியாத உயரிய தியாகமும் அவமாகிப் போகாமல் அர்த்தமுள்ளனவாக வேண்டும்' என 'காலைக்கதிர்' பத்திரிகையின் பிரதம ஸ்தாபக ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன் தனது முதல் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டார்.

***காலைக்கதிரின் அக்னி வீச்சாக***

2016 கார்த்திகை 05 முதல் தமிழ்ப்பேசும் மக்களின் தனித்துவக் குரலாக ஒலிக்கத் தொடங்கிய 'காலைக்கதிர்' பத்திரிகையின் பிரதம ஸ்தாபக ஆசிரியராக ம.வ. கானமயிலநாதன் பணியாற்றினார்.

“பத்திரிகை காலத்தின் கண்ணாடி. ஒரு கருத்துருவாக்கி. அதற்கு அபாரமான சக்தி உண்டு. வாசகனின் ஆன்மாவைப் பற்றி, அவனை ஆகர்ஷித்து, நெறிப்படுத்தும் வழிகாட்டி அதுவே. வாசகனின் இருந்த மனக் குகைக்குள் வெளிச்சத்தைப் பாய்ச்சி, மாயையைப்போக்கி, கனவுகளைக் கலைத்து, யதார்த்தத்தை விளக்கி, சிந்தனை விழிப்புணர்வைத் தூண்டி, நம்பிக்கையை வளர்த்து நெறிப்படுத்தும் நல்லாசானும் அதுவே” - என்றும் தன் ஆதர்சனமாக தன் முதல் தலையங்கத்தில் கூறியுள்ளார்.

கதிரவனின் கதிர்கள் போன்று களனியிலே பூரித்து தலை சாய்க்கும் நெற்கதிர்கள் போன்று 2016.11. 05 முதல் 'காலைக்கதிர்' தங்குதடையின்றி - காலகதி பிசகாமல் - காலைக் கதிரவனின் கதிர்கள் பார்மீது பரவுவது போல, 'காலைக் கதிரு'ம் நாளாந்தம் தவறாமல் விடிகாலையில் மக்களை நாடிவர ஆசிரியர் கானமயிலநாதன ஆற்றிய பங்கும் அளப்பரியதே.

'உண்மை - நேர்மை - பக்கம் சாராமை' என்ற தாரக மந்திரத்தை வரித்துக்கொண்டு, ஒரு புதிய - நீதிநாடி - நேரிய - சீரிய - ஊடக தர்மத்தைத் தனது பாதையாக வகுத்துக்கொண்டு, நமது இனத்தின் விடிவுக்காகவும், உயர்ந்த சமூக மாற்றத்திற்காகவும் இன, மதநல்லிணக்கத்துக்காகவும் அர்ப்பணிக்கும் வகையிலும் 'காலைக்கதிர்' தளராது இந்த வாழ்வில் பணியாற்ற பிரதம ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன் பிரதிக்ஞை செய்தமையை எளிதில் மறக்க முடியாது.

சமூகப் பிரக்ஞையுடனும், இனவுணர்வுடனும் தனது மக்களின் சமூக விடுதலைக்காகக் கிளர்ந்தெழும் பத்திரிகை, தனது மக்களின் தனது சமூகத்தின் - இருப்புக்கே கவசமாகவும் காவலனாகவும் உயர்கின்றது. அந்த அரும் பணியே ம.வ.கானமயில நாதனின் இலக்காக என்றும் இருந்தது.

தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்ப்பணித்தது மாத்திரமன்றி ஈழத்துப் பத்திரிகை ஜாம்பவான்கள் என்று குறிப்பிடத்தக்க தினகரன் பத்திரிகை ஆசிரியர் சிவகுருநாதன், தினபதி பத்திரிகை ஆசிரியர் சிவநாயகம், ஈழநாதம் ஆசிரியர் எஸ்.கோபாலரட்ணம் ஆகியோரின் வரிசையில் வடக்கில் தன்னையும் தடம் உதயன் கானமயிலநாதன்.

***துணிச்சலுடன் வழி நடாத்திய பத்திரிகையாளர்***

போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீரமாகத் துணிச்சலுடன் வழி நடத்தியவர் ம.வ.கானமயிலநாதன். ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லி, தமிழிற்கும், தமிழர்களுக்கும் பத்திரிகைத் துறையில் இவர் செய்த சேவை மிக்க அளப்பரியது.

ஈழத்துப் பத்திரிகை உலகைத் துணிச்சலுடன் தூக்கி நிறுத்தியவர் கானமயிலநாதன். ஈழ ஊடகத் துறையின் அடையாளமாகவும், மூத்த ஆளுமையாகவும் விளங்கிய மூத்த ஊடகவியலாளரும், உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில நாதன் 22.11.2021 அன்று நல்லூரில் தனது 79 ஆவது வயதில் காலமானார்.

எதையும் சாதிக்க முடியும் என்று ஊடகத்துறைக்கு வரும் இளையோர்களுக்கு வழிகாட்டியாக, தமிழ் ஊடக வரலாற்றின் ஒரு பெரு ஆலமரமாக கானமயில நாதன் பெருவிருட்சமாக விளங்கினார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.வ.கானமயில் நாதன் 1942 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி பிறந்தார். ஊடகவியலாளருக்கு இருக்க வேண்டிய இளஇரத்தம் அவரது உடலிலே என்றும் ஓடிக் கொண்டிருந்தது. அவர் ஓய்வுபெற்ற நிலையிலும் ஊடகப் பணியைத் தொடர்ந்த இளைஞன் என்றால் மிகையல்ல.

1962ஆம் ஆண்டு ஊடகத்துறையில் காலடி எடுத்து வைத்தது முதல் 56 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் தடம்பதித்தார். 1962 ஆம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரி

தொடர்ச்சி▼

# உயிர்ச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பணியாற்றிய துணிச்சலான பத்திரிகையாளர் கானமயிலநாதன்

தொடர்ச்சி▲

கையில் உதவி ஆசிரியராகத் தொடங்கியது இவரது ஊடகத் துறை வாழ்வு. அதன்பின்னர் 1965ஆம் ஆண்டு 'தினபதி' பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து பின்னர் செய்தி ஆசிரியராக உயர்ந்தார். 1983 ஆம் ஆண்டு இனக் கலவரம் நடக்கும் வரை கொழும்பில் தினபதியிலேயே பணியாற்றினார்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் திரும்பிய இவர், பின்னர் வீரகேசரியில் பணியாற்றினார். அதன் பின், நவம்பர் 1985ஆம் ஆண்டு 'உதயன்' பத்திரிகை ஆரம்பிக்கப் பட்டபோது, பிரதம ஆசிரியராகப் பெறுபேற்று நீண்டகாலமாக பிரதம ஆசிரியராகப் பணி யாற்றினார்.

### உதயனின் உயிர் நாதமாய்

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக அவர் பணியாற்றிய போது எதிர்கொண்ட ஆபத்துக்கள் சவால்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் அவற்றுக்கு எல்லாம் அஞ்சாது, தொடர்ந்தும் ஊடகப் பணியை முன்னெடுத்தார்.

பலதரப்பட்ட அரசியல் அனுபவ அறிவுடைய அவர், தமிழ் மக்களின் குரலாக மக்களுக்காகப் பேசுகின்ற நல்ல மனம் படைத்தவர். ஆகவே அவர் யாழ்.குடாநாட்டின் மிக மூத்த யாவரும் பெருமைப்படக் கூடிய ஒரு ஊடகவியலாளராக மிளிர்ந்தார்.

உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது முதல் தனது வாழ்வின் இறுதிக்காலம் வரையிலான 36 வருடங்கள் பிரதம ஆசிரியராக கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற்றுப் பதிவே. இறுதியாக காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பங்களித்தார். சிறந்த வழிகாட்டியாகவும் பண்பாளனாகவும் தன்னை நிலைநிறுத்திய பத்திரிகை ஆசான் இவர்.

### சத்தமற்ற ஊடகவியலாளராக

ஈழ விடுதலைப்போராட்டத்தின் சத்தமற்ற ஊடகவியலாளர்களில் ஒருவராக இருந்து, மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயிலநாதன் தமிழ் மக்கள் மீதான அரச அடக்குமுறையை வெளியுலகத்துக்கு வெளிப்படுத்தியவர்.

உதயன் பத்திரிகை மீது, பேரினவாத அரசுகள் கொடுஞ்சினம் கொண்டிருந்து, உதயனின் குரலை நசுக்கி விடவேண்டும் என்று அந்த அரசுகள் கங்கணம் கட்டிச் செயற்பட்ட காலம். உதயன் பத்திரிகைமீது எண்ணிலடங்காத தாக்குத்தல்கள், உயிர் பறிப்புக்கள் நிகழ்ந்தன.

ம.வ.கானமயில்நாதன் மீது யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் வைத்து, இராணுவ வாகனத்தால் திட்டமிட்டு விபத்து ஏற்படுத்தப்பட்டது. அதில் அவர்



காயங்களுடன் தப்பியபோதும், அன்று முதல் கோல் ஊன்றி நடக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஆயினும் வடக்கில் இருந்து வெளியான தமிழ் மக்களின் குரலை கொடுங்கோலர்களால் நசுக்க முடியவில்லை. ஊடக பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப் படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த மண்ணில் சோரம் போகாது தனது ஊடகப்பணியை ஆற்றியவர் ம.வ.கானமயிலநாதன்.

### கொலைவாளின் கீழாக ஊடகப் பணி

2005இன் பிற்பகுதியில் துப்பாக்கிதாரர்களது கொலைக் கரங்களில் இருந்து தப்பிக்க அவர் வருடக்கணக்கில் தனது அலுவலகத்தில் முடங்கிக் கிடந்தே, நாள்தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தார்.

ம.வ.கானமயிலநாதனை அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர் பார்த்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலைவாளின் கீழாக ஊடகப் பணியாற்றியவர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட பரப்பில் ஊடக பங்களிப்பு பற்றிய வரலாற்றுப் பதிவுகளில் என்றுமே விலக்கப்பட முடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார்.

### தமிழ் மக்களின் குரலாக

மறைந்த கானமயிலநாதன் நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணி யாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுள் அவரும் ஒருவர்.

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லவேண்டும். எதிலும் கேள்வி கேளுங்கள். எதற்காகவும் விட்டுக்கொடுப்புகளை செய்யாதீர்கள். ஊடகத்துறைக்கு வரும் இளையோர்கள் இதை மனதில் எப்போதும் வைத்திருங்கள்.

சாதிக்க முடியும் என்று வழிகாட்டிய தமிழ் ஊடகம் வரலாற்றின் ஒரு பெரு ஆலமரம் சரிந்து நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

ம.வ.கானமயில்நாதனின் பாசறையில் வளர்ந்த பல ஊடகவியலாளர்கள் இன்றும் உலகின் பல திசைகளிலும் தேமதுரத் தமிழை வையகமெங்கும் காத்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில்நாதனின் பேனா உண்மைகளை வரிகளாக்கி வரலாற்றில் ஆவணமாக்கி உள்ளார்.

### பிரான்ஸின் தலைநகரில் விருது

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில், நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றியமையை கௌரவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில்நாதனின் ஊடகத்துறையில் தேசியம் சார்ந்த நெருக்கடியான சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ். ஊடக அமையத்தால் வாழும்போதே கௌரவிக்கப்பட்டார்.

ஈழத்துப் பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாக ஆசிரியராக விருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும், ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது பயணித்துக் கொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயிலநாதன் ஊடகப் பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு என லாம்.


### இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு:

'எமது மக்களுக்கான குரலாக நாங்கள் இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் எமது செயற்பாடுகள் அன்றும் - இன்றும் அமைந்தன. அதற்காகப் பலவற்றை இழந்த போதும், முன்நோக்கியே சென்றோம்'. இது முதன்மை ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன் கூறிய வார்த்தைகளாகும்.

'நாம் கடந்து வந்த பாதையில் சுமந்த வலிகளின் ஊடாகப் புரிந்து கொள்ள முடியும். ஊடகமாக மக்களுக்கான தகவல்களைச் சரிவர வழங்கி, எம் மக்களின் உரிமைகளுக்காகப் பேசுகின்றோம். அதனில் மிகுந்த நிறைவும் இருக்கின்றது' என்று 2015ஆம் ஆண்டு வழங்கிய பேட்டி ஒன்றில் பூரிப்புடன் தெரிவித்திருந்தார்.

தன் வாழ்வின் பெரும் காலத்தை தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்த ஊடகப் பெருந்தகை ம.வ.கானமயில்நாதன் மக்களுக்கான குரலாக ஒலித்த அந்தப் பேனாப் போராளி இன்று இல்லை. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பது என்ற கொள்கையின்படி, சமூகத்தின் காவலனாக தனது பணிகளைச் செய்ததில் முதன்மை ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன் ஆற்றிய பங்கு அளப்பரியது.

# சாயி பாபாவின் நூறாவது ஜனன தினம் நாளை உலகம் முழுவதிலும் நிகழ்வுகள்



இந்த நூற்றாண்டில் வாழ்கின்ற சாயி பக்தர்கள், மிகவும் கொடுத்து வைத்தவர்கள். சீரடி சாயி பாபாவின் 100 ஆவது மகா சமாதி நன்னாளையும், சத்ய சாயி பாபாவின் 100 ஆவது ஜெனன தினத்தையும் அனுபவிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100 ஆவது ஜெனன தினத்தை, உலகிலுள்ள அனைத்து சாயி ஸ்தாபனங்கள், நாளை 23 ஆம் திகதி நவம்பர் மாதம், ஞாயிற்றுக்கிழமை, வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.

அவர் வாழ்ந்த காலகட்டத்தில், அவர் நிகழ்த்திய மகத்தான சாதனைகள் என்றும் அழியாமல் எப்போதும் நிலைத்து நிற்பவையாகும். பாரதத்தில் அவதரித்த பல்வேறுபட்ட மகான்களில், இவர் எப்போதும் உச்சத்தில் நிற்கின்றார். அதனால்தான் அவர் சமாதி அடைந்தபோது, பாரத தேசம் அன்றைய தினத்தை தேசிய நிகழ்வாக்கி. இராணுவ மரியாதையுடன், அவரது உடலில் இந்திய தேசியக் கொடியைப் போர்த்தியது. அப்போதைய பிரதமர் உட்பட பல அரசு பிரமுகர்கள் கலந்துகொண்டமை ஒரு பெருமைப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். அதுபோன்று இந்த மகானின் 100 ஆவது பிறந்த தினத்தை இந்திய அரசு கௌரவித்து, அவர் வாழ்ந்து சமாதியடைந்த, தென் இந்திய ஆந்திரா மாநிலத்தில், புட்டபர்த்தி நகரில், இந்தியப் பிரதமரும், துணை ஜனாதிபதியும் கலந்து, இந்திய அரசின் அனுசரணையில் 100 ரூபா மதிப்புள்ள தபால் தலையையும், 100 ரூபா மதிப்புள்ள நாணயத்தையும் வெளியீட்டு சிறப்பிக்கின்றார்கள்.

இந்த நூற்றாண்டில் அவர் நடத்திக்காட்டிய தெய்வீகச் சாதனைகளை சற்று உற்றுநோக்கும் போது, அனைத்து இன மத உலக மக்களும், அவரது ஜெனன தின நூற்றாண்டைக் கொண்டாடுவதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வார்கள். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவைப் பற்றி அதிகம் தெரியாதவர்களுக்கு, அவர் செய்த மூன்று சாதனைகள் அறியாதிருக்க வாய்ப்பில்லை.

அதில் ஒன்று, அரசாங்கத்தால் கூட செய்யமுடியாத குடி தண்ணீர்த் திட்டம். அதாவது தென் இந்தியாவில், ஆந்திரா மாநிலத்தில், கிட்டத்தட்ட 100 கிராமங்களுடைய ஒரு மாவட்டத்துக்கு, தனித்துவமான தனது தெய்வீக மனித ரூபத்தில், குறைந்த காலத்தில், தனது அறக்கட்டளை மூலமாக, குடி தண்ணீர் தேவையை நிறைவேற்றிய மாபெரும் சாதனையாகும். பக்கத்து மாநிலமான தமிழ்நாட்டுக்கு, ஆந்திரா மாநிலத்தில் ஓடிக்கொண்டிருந்த கிருஷ்ணா நதியின் ஒரு கிளையை திருப்பியெடுத்து, பெருங்குழாய்களைக் கொண்டு, எடுத்து வரப்படும் குடி தண்ணீர் இடையில் வீண் விரயம் ஏற்படாதவாறு, கச்சிதமாக கொண்டுவந்து, அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சரும், கடும் நாத்திகவாதியுமான கலைஞர் கருணாநிதியிடம் ஒப்படைத்து, அவர்கள் அனைவரையும் மலைக்க வைக்கச் செய்த சாதனையும் மறக்கமுடியாதது.

அடுத்தது, 'சத்ய சாயி சேவாதள்' என்னும் எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல், மற்றவர்களுக்கு சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட லட்சக்கணக்கான பக்தர்களைக் கொண்ட ஒரு சேவை. அந்த அமைப்பை உருவாக்கி, இந்தியா மட்டுமல்ல உலகமெங்கும் அதனை விஸ்தரிக்கச் செய்து, அந்த அமைப்பின் மூலம், அந்த அந்த நாடுகளில், அங்கு வாழும் மக்களுக்கு, இன, மத. சாதி, மொழி என்று வேறுபாடு பாராது செய்துவரும் தன்னலமற்ற சேவையும் மகத்தான சாதனைகளில் மற்றொன்றாகும்.

அடுத்தது, ஓர் அரசால் நடைமுறைபடுத்த முடியாத, உலகபுகழ் பெற்ற, அதி உயர்வான, நவீன பிரமாண்டமான, மருத்துவமனைகள் இரண்டை, பகவான் புட்டபர்த்தியிலும், பெங்களூரிலும், குறிப்பிட்ட தினத்தில், குறுகிய காலகட்டத்தில் நிறுவியமையாகும். உள்நாடு, வெளிநாடுகளின் பிரசித்திபெற்ற வைத்தியர்கள், தங்களது தன்னலமற்ற சேவை அடிப்படையில் கடமைபுரிவதும், இன மத மொழி சாதிகளைக் கடந்து, அனைத்து உலக மக்கள் இலசவ சேவை பெறுவதும் மற்றொரு சாதனையாகும். அங்கு அனைத்து நோய்களுக்குத் தேவையான அதி உயர்வான சத்திரசிகிச்சைகள், எந்த எதிர்பார்ப்பும் இன்றி, எந்தக் கட்டணமும் இன்றி இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்தின் நவீன வைத்திய முறையான, ரோபோ சத்திர சிகிச்சை பிரிவு, பாபாவின் 100 ஆவது பிறந்த நாள் பரிசாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சாதனைத் திட்டங்கள் அனைத்தும் சத்ய சாயி பாபாவின் மனதில், அவரது அவதாரம் தோன்றியபோது உருவானவையாகும். அவற்றைத் தனது வாழ்நாளில் நடைமுறை படுத்தியமைதான் அவர் நடத்திக்காட்டிய மகத்தான சாதனைகள்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில், பாபாவின் பிறந்தநாள் முன்னோட்டமாக, இன்று நவம்பர் 22 ஆம் திகதி, சனிக்கிழமை, காலை 9 மணிக்கு, ஸ்ரீ சத்யசாயிபாபாவின் 100ஆவது பிறந்தநாள், பிரசாந்தி கொடி ஏற்றத்துடன் தொடங்கி காலை 10 மணிக்கு, இலங்கை அரசாங்கத்தின் அஞ்சல் துறை சார்பாக, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்களது ஏற்பாட்டில், மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவின் ஒருங்கிணைப்புடன், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தபால் தலை வெளியீடு இடம்பெற்றது.

இன்று மாலை பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சித்திரத்தேர் பவனி நடைபெறும். நாளை நவம்பர் 23 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, பகவானின் 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள காலை 5 மணி தொடக்கம், சாயி பூஜை, சாயி பஜனை, திருஊஞ்சல், பிறந்தநாள் கேக் வெட்டுதல் மற்றும் திரிமங்கள ஆராத்தி போன்ற நிகழ்வுகளுடன் விஷேட பிறந்தநாள் அன்னதானம் இடம்பெறுகின்றது.

சிறப்புமிக்க விருந்தாக, நாளை ஞாயிறு மாலை 6 மணிக்கு, 'ஸ்ரீ சத்ய சாயியின் மகிமை' என்ற தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பிரபல தென் இந்திய ஆன்மீகச் சொற்பொழிவாளர் வாரியார் விருது பெற்ற 'இன்னிசை சொல்லரசி', 'முத்தமிழ் செல்வி' திருமதி எல். வாசுகி மனோகரன் எம். ஏ அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

*- எஸ்.என். உதயநாயகம். -*
(தலைமை அறங்காவலர்,
பகவான் ஸ்ரீ சத்ய சாயி
பாபா மத்திய நிலையம்,
கொழும்பு)

# அ.தி.மு.கவுடன் கூட்டணி என்று இப்போதைக்கு சொல்ல முடியாது

## பிரேமலதா தெரிவிப்பு



பழனிசாமி 2026 இல் கட்டாயம் தே.மு.தி.கவுக்கு மாநிலங்களவை ஆசனம் தருவதாகக் கூறிவிட்டார். அதற்காக அவர்களுடன் தான் கூட்டணி என்று இப்போதைக்கு சொல்ல முடியாது என தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தே.மு.தி.க. மக்கள் விரும்பும் மகத்தான கூட்டணியை அமைக்கும். ஜனவரி 9 ஆம் திகதி கடலூர் மாநாட்டில் கூட்டணியை அறிவிப்போம். நேற்று முளைத்த காளான் ஒரு நாள் மழைக்கே தாங்காது என்று நான் விஜய்யை குறிப்பிடவில்லை. புதிதாக 5 கட்சிகள் உருவாகியிருக்கிறது; அவர்களை சொன்னதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

விஜய்யை நாங்கள் எப்போதும் எதிர்க்கவில்லை. எங்கள் வீட்டு பையன் என்று தானே சொல்லி வருகிறேன். அவர் விஜயகாந்த் மாதிரி சினிமாவிலும், அரசியலிலும் சாதிக்க வேண்டும். விஜய்யை கூத்தாடி என்று நான் சொன்னதே இல்லை. நடிகர்கள் யார் அரசியலுக்கு வந்தாலும் அப்படித்தான் மற்றவர்கள் சொல்கிறார்கள்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. அதை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்கிறோம். அதற்காக அவர்களுக்கு எதிரான கட்சிகளுடன் கூட்டணி வைப்போம் என்று கூற முடியாது. கூட்டணி விஷயத்தில் எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். திமுக கூட்டணியில் இருக்கும் கட்சிகள் கூட மாற வாய்ப்புள்ளது.

யார், யாருடன் கூட்டணியில் இருப்பார்கள் என்பதை சொல்ல முடியாது. பிஹாரில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10,000 இந்திய ரூபா கொடுத்து தான் வெற்றி பெற்றதாக ப.சிதம்பரம் கூறுகிறார். ஆனால் தமிழகத்தில் வாக்குக்கு பணம் கொடுத்து தான் வெற்றி பெறுகிறீர்கள். அதை இல்லை என்று அவர் மறுப்பாரா?

வருகிற ஆட்சியில் கூட்டணி அமைச்சரவை அமைய வாய்ப்புள்ளது. எங்கள் கட்சியிலிருந்து எம்.எல்.ஏ-க்கள் கட்சி மாறியது, மாநிலங்களவை ஆசனம் தர மறுத்தது ஆகிய அனைத்தையும் சேர்த்துத்தான் துரோகம் என்றேன். பழனிசாமி 2026 இல் கட்டாயம் தே.மு.தி.க-வுக்கு மாநிலங்களவை சீட் தரப்படும் என்று கூறிவிட்டார். அதை நாங்கள் 2025 இல் தருவார்கள் என்று நினைத்தோம். அதனால்தான் குழப்பம் ஏற்பட்டது. அதற்காக அவர்களுடன் கூட்டணி என்று இப்போதைக்கு சொல்ல முடியாது.

இந்த தேர்தல் நிச்சயம் தமிழகத்தில் நடக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும். வாக்குத் திருட்டு நடக்கக் கூடாது என்பதில் தே.மு.தி.க. உறுதியாக இருக்கிறது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்ததற்கான காரணத்தை மத்திய அரசு விளக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரத்தில் மக்களை நாளை சந்திக்கிறார் விஜய்

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நாளை காஞ்சிபுரம் ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மக்களை சந்திக்கவுள்ளார்.

இந்த நிலையில், அதுகுறித்து முக்கிய அறிவுறுத்தல்களை அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கலந்து கொள்ளும் உள்ளரங்கு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை ஞாயிற்றுக்கிழமை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க உள்ளரங்கு சந்திப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த, கியூ.ஆர். குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 2000 பேர் மட்டுமே இந்த உள்ளரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கழகத்தினரும் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு



அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

கரூர் சம்பவத்துக்குப் பிறகு பொது மக்களை சந்திக்காமல் இருக்கும் த.வெ.க. விஜய், நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் மக்கள் சந்திப்பை நடத்த திட்டமிட்டுள்ளார்.

த.வெ.க. தலைவர் விஜய் கரூரில் பிரச்சாரம் மேற்கொண்டபோது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதன் பிறகு பொது நிகழ்வுகளில் விஜய் பங்கேற்காமல் இருந்து வந்தார். இதனிடையே, கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கே அழைத்து ஆறுதல் கூறினார்.

அண்மையில் கட்சியின் சிறப்பு பொதுக்குழுவை கூட்டிய விஜய், மீண்டும் மக்கள் சந்திப்புக்கு அவர் ஆயுத்தமானார். இதற்காக தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் பேரை தேர்வு செய்து 'மக்கள் பாதுகாப்புப் படை'யை உருவாக்கினார். அவர்களுக்கு ராணுவம் மற்றும் காவல்துறையில் ஓய்வு பெற்ற அதிகாரிகளை கொண்டு பயிற்சியும் அளித்தார்.

இந்நிலையில், சேலத்தில் இருந்து டிசம்பர் 4 முதல் மீண்டும் பிரசாரத்தைத் தொடங்க விஜய் முடிவு செய்தார். ஆனால் திருவண்ணாமலை திருக்கார்த்திகை திருவிழா உள்ளிட்ட சில பாதுகாப்புக் காரணங்களால் வேறு ஒரு திகதியில் பிரசாரத்தை வைத்துக்கொள்ள பொலிஸார் அறிவுறுத்தினர்.

இதற்கிடையே, நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். இதற்காக கல்லூரி வளாக உள் அரங்கத்தில் போதுமான அளவு இருக்கைகளும், தடுப்பு வேலிகளும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. காலை 10 மணிக்கு இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.





# பங்களாதேஷ் நில அதிர்வு; பலி எண்ணிக்கை அதிகரிப்பு

பங்களாதேஷ் தலைநகர் அருகே நேற்று காலை ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

5.7 மெக்னிடியூட் அளவில் டாக்காவிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நர்சிங்டி மாவட்டத்தின் மாதப்டி பகுதியில் இந்த நில அதிர்வு மையம் கொண்டிருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



இந்த நில அதிர்வால் கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால் மக்கள் வீடுகள், அலுவலகங்களை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த நில அதிர்வால் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என முதல் கட்ட விசாரணைகளின் மூலம் தகவல் வெளியானது.

மீட்புக் குழுவினர் தொடர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# 25 மீற்றர் ஆழத்தில் 80 அறைகளுடன் ஹமாஸின் சுரங்கம் கண்டுபிடிப்பு

இஸ்ரேலியத் தற்காப்பு படை காசா பகுதியில் ஹமாஸ் பயன்படுத்திய ஒரு சுரங்கத்தைக் கண்டுபிடித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சுரங்கத்தில் 2014 ஆம் ஆண்டு போரில் கொல்லப்பட்ட இராணுவத் தளபதி ஒருவரின் உடல் பாகங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

ரஃபா பகுதிக்கும், பள்ளிவாசல் ஒன்றுக்கும் கீழ் இந்தச் சுரங்கம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

7 கிலோமீற்றர் நீளமும் 25 மீற்றர் ஆழமும் கொண்ட இந்த சுரங்கம் 80 அறைகளையும் கொண்டது.

ஹமாஸ் தளபதிகள் ஆயுதங்களை சேமிக்கவும், தாக்குதல்களை திட்டமிடவும் இதைப் பயன்படுத்தியுள்ளனர்.





மூத்த தளபதிகளின் கட்டளை மையங்களும் இங்கே கண்டறியப்பட்டுள்ளன.






# நைஜீரியாவில் கத்தோலிக்க பாடசாலையில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கடத்தல்

நைஜீரியாவில் அமைந்துள்ள கத்தோலிக்க பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக 100 மாணவர்கள் கடத்தப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்போதைய தகவல்களின் படி அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காணாமல் போன மாணவர்களைத் தேடும் பணியில் பொலிஸ் மற்றும் இராணுவப் படைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதே போன்ற தொடர்ச்சியான தாக்குதல்கள் நைஜீரியாவின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயுதம் தாங்கிய குழு ஒன்று, மாணவர்களையும் அங்குப் பணிபுரியும் ஒருசில ஊழியர்களையும் கடத்திச் சென்றதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நைஜீரியாவில் வேறொரு பகுதியில் உள்ள ஒரு பெண்கள் பாடசாலையில் இதே போன்ற சம்பவம் சில நாள்களுக்கு முன்னர் நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கனடா முரசு

சனிக்கிழமை 22/11/2025

**உடல் ஆரோக்கியம் குறித்து கனடியர்களுக்கு எச்சரிக்கை**

கனடியர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் எச்சரிக்கை அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவில் பெரும்பாலான மக்கள் உரிய அளவில் உடல் இயக்க செயற்பாடு 02





# கனடிய உற்பத்திகளை கொள்வனவு செய்யும் புதிய சட்டமூலம் ஒன்டாரியோவில் அறிமுகம்

**கனடிய உற்பத்திகளை கொள்வனவு செய்யும் புதிய சட்ட மூலம் ஒன்றை ஒன்டாரியோ மாகாண அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது.**

**முதல்வர் டக் ஃபோர்ட் தலைமையிலான ஒன்டாரியோ அரசாங்கம் இந்த புதிய சட்டமூலத்தை அறிமுகம் செய்துள்ளது.**

**ஆண்டுதோறும் மாகாணம் செலவிடும் 30 பில்லியன் டொலர் கொள்முதல் செலவில் ஒன்டாரியோவில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு கட்டாய முன்னுரிமை வழங்கும் சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்த Buy Ontario Act வியாழக்கிழமை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்து வரும் வரிகளால் கனடா எதிர்கொள்ளும் பொருளாதார அழுத்தத்திற்கு பதிலாக இது கொண்டு வரப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

கொள்முதல் செயல்முறையில் ஒன்டாரியோவில் தயாரித்த பொருள்கள் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், பின்னர் கனடாவில் தயாரித்தவை இரண்டாம் விருப்பம் என கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ அமைச்சகங்கள், அரசு அமைப்புகள், பொது துறை நிறுவனங்கள், நகராட்சிகள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் துணை ஒப்பந்தக்காரர்கள் எல்லோருக்கும் இந்த சட்டம் பொருந்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

சட்டத்தை மீறுபவர்களுக்கு அபராதங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிரிட்டிஷ் கொலம்பியா, பெல்லா கூலாவில் கரடி தாக்குதலுக்கு இலக்காகி 11 பேர் காயம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பெல்லா கூலா பகுதியில் கரடிகளின் தாக்குதலுக்கு இலக்காகி 11 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான நால்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவித்துள்ளன.

சம்பவத்திற்குப் பின்னர், வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் பொது மக்களுக்குக் காடு மற்றும் நதி பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என அவசர எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விசாரணை மற்றும் சூழ்நிலை மதிப்பீடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த திடீர் கரடி தாக்குதல் உள்ளூர் சமூகத்தில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கனடிய முன்னாள் அமைச்சருக்கு பிரித்தானியாவில் உயர் பதவி



கனடாவின் முன்னாள் துணை பிரதமர் கிரிஸ்டியா ஃப்ரீலாண்ட், பிரபலமான ரோட் டிரஸ்ட் Rhodes Trust அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொறுப்பு ஜூலை 1, 2026 முதல் அமுலுக்கு வரும் என்று அந்த கல்வி அறக்கட்டளை நிறுவனம் உறுதிப்படுத்தியது.

ஃப்ரீலாண்ட் இந்த பொறுப்பை ஏற்க ஆக்ஸ்ஃபோர்டுக்கு குடிபெயர உள்ளார் என ரோட்ஸ் டிரஸ்ட் பேச்சாளர் பபெட் லிட்டில்மோர் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஃப்ரீலாண்ட் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகும் திட்டத்தை அறிவிக்கவில்லை. அவரது அலுவலகத்திடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை.

அவரது உள்ளூர் லிபரல் தொகுதி அமைப்பு, அவர் எப்போது விலகுவார் அல்லது இடைத்தேர்தல் வேட்பாளர் யார் எனும் விவரங்களைப் பற்றி எந்த தகவலும் இல்லையென தெரிவித்துள்ளது.

ஃப்ரீலாண்ட் ரோட்ஸ் உதவித் தொகை பெற்றவர் என்பது குறிப்பிட்டுள்ளார்.

ரோட்ஸ் புலமைப் பிரிசில் எனது வாழ்க்கையையும் தொழிலையும் மாற்றியது எனவும், இந்தப் பொறுப்பை ஏற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது பெருமை என்றும் ஃப்ரீலாண்ட் தெரிவித்துள்ளார்.

1990களின் தொடக்கத்தில் அவர் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



## உடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபடுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நாள்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டிய உடல் பயிற்சிகளை மேற்கொள்வதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

வயது வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது வாழ்க்கை முறையில் உடல் பயிற்சிகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதிக நேரம் அலைபேசிகளில் ஆழ்ந்திருப்பதாகவும், மளிகை கடைகளுக்கு கூட நடந்து சென்று பொருள்களை வாங்குவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.


குறிப்பாக கடந்த காலங்களில் மக்கள் நடந்து செல்வது அதிக அளவில் காணப்பட்டதாகவும் தற்பொழுது நடப்பது வெகுவாக குறைந்துவிட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.


இதனால் கனடியர்கள் பல்வேறு உடல் ஆரோக்கிய சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

வேலைப்பளு காரணமாக கனடியர்கள் உடல் பயிற்சிக்கு அல்லது உடல் இயக்க செயற்பாடுகளுக்கு கூடுதல் நேரத்தை ஒதுக்குவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

உடல் இயக்க செயற்பாடுகளின் வீழ்ச்சி சுகாதார செலவுகளை அதிகரிப்பதாகவும் இது நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் சிக்கலாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்பயிற்சிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.





# ஐக்கிய அரபு இராச்சியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்ட கனடா

கனடா பிரதமர் மார்க் கார்னி கடந்த வியாழக்கிழமை அபூதாபியில் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

சூடானில் நடைபெறும் இனஅழிப்பு வன்முறைக்கு ஐக்கிய அரபு இராச்சியம் ஆதரவளிப்பதாக எழும் குற்றச்சாட்டுகள் காரணமாக ஊடக அணுகல் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், இந்த அரசுமுறை பயணம் நடைபெற்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி ஷேக் முகம்மது பின் சாயித் அல் நஹ்யானை சந்தித்த பிறகு, இந்த முதலீட்டு ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது.

இரு நாடுகளும் விரைவில் முழுமையான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கார்னி வியாழக்கிழமை காலை ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில் மற்றும் தொழில்நுட்ப அமைச்சரான சுல்தான் அல் ஜாபரை சந்தித்தார்.

பின்னர் அபூதாபியின் பிரமாண்ட பள்ளிவாசலையும் அவர் சுற்றிப்பார்த்தார்.



